விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (19.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

இன்று 2-வது ஆண்டு நிறைவு

# மிகப்பெரும் மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை பரிணமிக்கும்

## அரசியல் அவதானிகள் கருத்துரைப்பு

**(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களின் மிகப் பெரும் பலம் தமிழ் மக்கள் பேரவை. அது காலத்தின் தேவையாக உருவாகிய மக்கள் இயக்கம் என மதத்தலைவர்களும், தமிழ்ப் புத்திஜீவிகளும், அரசியல் தலைவர்களும், சமூக மற்றும் பொது அமைப்புச் சார்ந்த பிரதிநிதிகளும் புகழாரம் சூட்டியுள்ளனர்.**

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்து இன்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தமிழ் மக்கள் பேரவைக்கு வாழ்த்துத் தெரிவித்த பிரமுகர்கள்; தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் அமைக்கப்படாமல் இருந்திருந்தால், தமிழர் அரசியலில் மிகப்பெரும் மோசடிகளும் தமிழின விரோத செயல்களும் தலைவிரித்து ஆடியிருக்கும் என்றும் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் எழுச்சியை நிரூபித்ததன் மூலம் தமிழ் மக்கள் தோற்றுப் போன இனம் அல்ல என்பதை வெளிக்காட்டியதுடன் தமிழினத்துக்கு எதிரான செயல்களைச் செய்வது சுலபமான காரியமல்ல என்பதை தமிழின விரோதிகளுக்கு தெரியப்படுத்திய பெருமை தமிழ் மக்கள் பேரவையை சாரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் தமிழகத்திலும் புலம்பெயர் உறவுகள் வாழும் வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது ஆண்டு நிறைவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில்,

வடக்கிலும் கிழக்கிலும் மிகப்பெரும் எழுச்சியைச் செய்த 23☛

## தொற்றுநோய் தொடர்பில் அவதானமாக இருங்கள்

### வட மாகாண சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொற்று நோய்கள் தொடர்பில் பொதுமக்கள் அசண்டையீனமாக இருக்காமல் கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமென தெரிவித்த வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், சாதாரண காய்ச்சலே பாரிய விளைவை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பகுதியில் கடந்த ஒன்றரை மாதங்களில் ஏற்பட்ட நோய்த்தாக்கம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


முல்லைத்தீவு மாவட்ட 23☛

## மாநகர முதல்வர் பதவிக்கு

## தமிழ்த் தேசிய பேரவையின் வேட்பாளராக மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் இளம் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் நிறுத்தப்பட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)



## மலேசிய பிரதமர் முதல்வருடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு மூன்று நாள் அரசுமுறைப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் மலேசியப் பிரதமர் மொகமட் நஜிப் பின் துவான் அப்துல் ரசாக், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

மலேசியப் பிரதமர், வடக்கு மாகாண முதலமைச்சர் 24☛

## உள்ளூராட்சி தேர்தல் பெப்.10

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். 23☛

## வட மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் பதவி விலகல்

### அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆர்னோல்டின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாக, வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில், யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளராக ஆர்னோல்ட் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில், மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய ஆர்னோல்ட் தமது பதவி விலகல் கடிதத்தை கடந்த 14ஆம் திகதி தம்மிடம் கையளித்ததாக 24☛

## சட்டபூர்வ கேபிள் இணைப்பு யாழில் வெட்டிச் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நேற்று முன்தினம் இரவு கும்பலொன்றால் தனியார் நிறுவனத்தின தொலைக்காட்சி கேபிள் இணைப்பு வயர்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் யாழ்ப்பாணத்தில் கேபிள் தொலைக்காட்சி சேவைகள் தடைப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கறுப்பு நிற காரில் வந்தவர்களாலேயே இந்த நாசகார வேலை செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சட்டவிரோதமான முறையில் கேபிள் 24☛

## தேர்தல் முறைப்பாட்டுக்கு தனியான அலுவலகம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்பதற்காக தேர்தல்கள் செயலகத்தில் தனியான அலுவலகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மாவட்ட செயலக மட்டத்திலும் இவ்வாறான அலுவலகங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுக்களை ஏற்கும் பணிகள் இரண்டு கட்டத்தில் இடம்பெற்ற போதும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரே தினத்திலேயே இடம் 24☛

## இலங்கை ஜனாதிபதி மைத்திரியுடன் மலேசியப் பிரதமர் நேற்று சந்திப்பு

### பல்வேறு துறைகளில் ஒத்துழைக்க இலங்கையுடன் மலேசியா இணக்கம்

(கொழும்பு)

இராணுவப் பயிற்சி, புனைாய்வுப் பரிமாற்றங்கள், முதலீடு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மலேசியப் பிரதமரும் இணக்கம் கண்டுள்ளனர்.

இலங்கைக்கு மூன்று 23☛



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீக் காயத்துக்குள்ளான வயோதிபப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான 74 வயது மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு வடலியடைப்பை சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரான சின்னத்துரை பூமணி (வயது 74) என்பவரே மேற்படி பரிதாபகரமாக உயிரிழந்தவராவர்.

கணவன் மனைவியிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் இடம்பெற்றும் வந்துள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை வழமைபோல் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.


இந் நிலையில் ஆத் திரமடைந்த மூதாட்டி தன்னை தானே தீமூட்டி எரித்துள்ளார்.

இவர் தீயில் பற்றி எரிவதை கண்ட அயலவர்கள் ஓடி வந்து அவரை காப் பாற்றி, ஒரு மணியளவில் தெல்லிப்பழை வைத்தியசாலையில். அனுமதித்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் இரவு 8.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில், தான் கணவருடன் ஏற்பட்டவாக்கு வாதத்தில் மனமுடைந்து தற்கொலை முயற்சி செய்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## கண்ணீர் அஞ்சலி



**Lion S.பத்மநாதன் J.P**

**(முந்நாள் உப தலைவர் நகர சபை-பருத்தித்துறை)**

18.12.2017 அன்று மறைந்த எமது கழகத்தின் முந்நாள் தலைவர் அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுவதோடு அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**லயன்ஸ் கழகம்-வடமராட்சி**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



கடந்த 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் சரவணை கந்தையா (பரமு)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 19.12.2017 செவ்வாய்க்கிழமை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மீசாலை தெற்கு, மீசாலை**

**ஜெயக்காந்தன் (மருமகன்)**

# கிணற்றினுள் தவறி வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கண்பார்வை குறைந்த முதியவர் ஒருவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்

மானிப்பாய் நவாலி வடக்கை சேர்ந்த வெற்றி வேலு விக்னேஸ்வரன் (வயது 72) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

குறித்த முதியவர் நேற்று முன்தினம் தனது வீட்டில் மாட்டு தொழுவத்தை சுத்தம் செய்துவிட்டு கை கழுவுவதற்காக கிணற்றடிக்கு வந்துள்ளார்

இவருக்கு பார்வை குறைபாடு இருந்த காரணத்தினால் இவர் கிணற்றின் படிக்கட்டில் சறுக்குண்டு கிணற்றுக்குள் விழுந்துள்ளார்.

மதிய சாப்பாட்டுக்கு இவரை தேடி இவருடைய மகள் வந்த போது இவர் கிணற்றுக்குள் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## வாகனங்கள் வாடகைக்குத் தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை.

**0710404978**

(872)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பொதுமக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 19.12.2017ஆம் திகதி தொடக்கம் 25.12.2017ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத் தருகின்றேன்.


**வேலணை பிரதேச சபை** (சி-744)

**திரு.அ.குருநாதன் செயலாளர்**

## கண்ணீர் அஞ்சலி

வலம்புரிப் பத்திரிகையின் பருத்தித்துறை விற்பனை முகவரும் Canon Photo Copy கடை உரிமையாளருமான

**திரு.சிதம்பரப்பிள்ளை பத்மநாதன்** அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து அளவற்ற துயர் அடைகின்றோம். அவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.



**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.** (ஃ)

**வலம்புரி நிர்வாகம்**

## தைப்பொங்கல் நாளினை முன்னிட்டு மாபெரும் தாச்சி, எல்லே போட்டி-2018

இலங்கை தேசிய சமாதானப் பேரவை, சமுதாய அபிவிருத்தி நிறுவனம் என்பவற்றின் அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட ஊடக அமையம், கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகள் குழு என்பவற்றின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நாளினை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் தாச்சி, எல்லே போட்டிகளை நடத்தவுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது பகுதி விளையாட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பெயர் பட்டியலினை 28.12.2017 திகதிக்கு முன்னர் **சி.ஜீவநாயகம், இல.02, கச்சேரி அருகாமை, கிளிநொச்சி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

01.தாச்சிப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு அணி வீரர்கள் 10

02.எல்லே போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு அணி வீரர்கள் 20

**தொடர்புகளுக்கு:-மு.தமிழ்ச்செல்வன்-0777773442**

**-சி.ஜீவநாயகம்-0778049166**

(1871)


18 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வலம்புரியே
நீ பல்லாண்டு காலம் வாழ்க!
வாடிக்கையாளர்கள்.அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
Sun Furniy City
We'll make your dreams come true
நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக்கான
மெகா சேல்ஸ் (Mega Sales)
05.12.2017 - 15.01.2018 வரை
ரூ. 2,690
2 Years Warranty
ரூ. 3,190
1 Years Warranty
2.8L
ரூ. 2,390
Free Home Delivery*
Condition Apply
1 Years Warranty
ரூ. 2,990
மேலும் பல Home Theatre & Woofer
5 Years Warranty
9000BTU
ரூ. 49,990
1 Years Warranty
ரூ. 3,990
ரூ. 850
ரூ. 690
2 Years Warranty
3.1Amp UPS
ரூ. 3,890
10 Years Warranty
5 Years Warranty
DREAM WASH
ரூ. 17,900
JVC
ரூ. 16,500
ரூ. 3,200
DVD VIDEO
அனைத்து TVகளுக்கும் மூன்று வருட உத்தரவாதம்
ரூ. 20,750
ரூ. 32,900
ரூ. 34,490
ரூ. 38,500
SAMSUNG
Panasonic
Hisense
LG
Abans KONKA
32"
ரூ. 30,900
ரூ. 28,500
ரூ. 24,900
ரூ. 27,900
ரூ. 20,900
Sun Furniy City
We'll make your dreams come true
நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக்கான
மெகா சேல்ஸ் (Mega Sales)
6'x3' Single Layer
2 Years Warranty
ரூ. 2,490
ரூ.11,900
15 Years Warranty
Sofa Only
ரூ.32,900
2 Years Warranty
06 Chairs
(1 Table Free)
ரூ. 3,750
2 Years Warranty
2 Years Warranty
6'x3'
6'x5'
ரூ. 2,850
ரூ. 6,750
ரூ. 8,690
ரூ. 12,900
ரூ. 1,690
ரூ. 1,190
Stool Free
ரூ. 4,900
Kilinochchi Showroom :
Infront of old hospital
#315, A9 Road, Kilinochchi. T.P : 0773 526810, 021 2283456
3000 வகையான பொருட்களுக்கு
10% - 40% விலைக்கழிவு
Mullaitivu Showroom :
Infront of district hospital
Mulliyawalai, Mullaitivu. T.P : 077 5070130, 021 4927632

# கிளிநொச்சி தட்டுவன்கொட்டி பகுதியில் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் பலி: இருவர் படுகாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 ஆனையிறவு தட்டுவன்கொட்டி பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து தட்டுவன்கொட்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளானதில் இதில் பயணம் செய்த இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 7.00 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி தட்டுவன்கொட்டியைச்சேர்ந்த 29 வயதுடைய சிங்கராசா செந்தில்நாதன் என்பவரும் மற்றைய மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதில் கரணவாய் அண்ணாசிலையைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான நல்லதம்பி துஷ்யந்தன் என்பவரும் பலியாகியுள்ளார்.

இதேவேளை இவ்விரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த சின்னராசா கணேசலிங்கம் வயது 34 என்பவர் உட்பட இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-9,60,281,312)

### யாழ்.மாநகர சபைக்கான ஆசனப் பங்கீட்டில்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மீண்டும் குழப்பம் கூட்டத்திலிருந்து வெளியேறினார் சித்தார்த்தன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான ஆசனப் பங்கீட்டில் புளொட் கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து தற்போது இடம்பெறும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையேயான கூட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வெளியேறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையேயான கூட்டம் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றிரவு 7 மணி முதல் நடைபெற்றது. உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் தமிழ் அரசுக் கட்சிக்கு 60 சதவீதமும் ரெலோ, புளொட் கட்சிகளுக்கு தலா 20 சதவீதமும் ஆசன ஒதுக்கீடு வழங்கப்படும் என பங்காளிக் கட்சிகளின் தலைமைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாண மாநகர வட்டாரங்களின் அடிப்படையில் புளொட் கட்சிக்கு 2 வட்டாரங்கள் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சியால் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சிக்குச் சேர வேண்டிய மேலும் 3 வட்டாரங்கள் ரெலோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இடம்பெற்ற பேச்சுக்கள் திருப்தியளிக்காத நிலையில் கூட்டத்



திலிருந்து புளொட் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்தன் வெளியேறினார். (ம)

# கிளிநொச்சி ஆசனப் பங்கீட்டில் குழப்பம் கூட்டத்திலிருந்து வெளியேறியது புளொட்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆசனப் பங்கீட்டினால் கூட்டத்திலிருந்து வெளியேறியது ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

எதிர்வரும உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தீர்மானிப்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது

இதன்போது ஏற்கெனவே தலைமைகள் கூடி முடிவெடுத்ததன் அடிப்படையில் தலைமை வேட்பாளரை கொண்ட கட்சி அறுபது வீதமும் ஏனைய இரண்டு கட்சிகளுக்கும் தலா இருபது வீதமும் ஆசன பங்கீடு வழுங்குவதாக தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளுக்கும் தலைமை வேட்பாளர்களை பெற்றுக்கொண்டு ஏற்கெனவே தீர்மானித்த இருபது வீதத்தை கூட வழங்காத நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கடும்போக்காக செயற்பட்ட காரணத்தால் தாம் கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளதாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தலைமை பதவியையும் பெற்று இருபது வீதத்தை கூட வழங்க கடும்போக்குடன் பாராளுமன்ற உறுப்பினர் செயற்படுவதாகவும் இவ்வாறான கடும் போக்கினால் தாம் கூட்டத்திலிருந்து விலகியதாகவும் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்தும் விலகவுளதாக அவ் உறுப்பினர் மேலுமதெரிவித்தார். (ம-281)

## ரி10: கேரளா கிங்ஸ் சம்பியன்




முதலாவது 'ரி10' லீக் கிரிக்கெட் தொடரில், மோர்கன் தலைமையிலான கேரளா கிங்ஸ் அணி கிண்ணம் வென்றது. இறுதியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாபி லெஜண்ட்ஸ் அணியை தோற்கடித்தது.

சார்ஜாவில், முதலாவது 'ரி10' லீக் கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் பெங்கால் டைகர்ஸ், ரீம் இலங்கை, மராத்தா அரேபியன்ஸ் உள்ளிட்ட 6 அணிகள் பங்கேற்றன. இதன் இறுதியில், மோர்கன் தலைமையிலான கேரளா கிங்ஸ் அணி, மிஸ்பா வழிநடத்திய பஞ்சாபி லெஜண்ட்ஸ் அணியை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற கேரளா கிங்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் ஆடிய பஞ்சாபி அணிக்கு 10 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்கள் எடுத்தது.

பின் களமிறங்கிய அணி 8 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றுது. ஸ்டிர்லிங் (52), பொலார்ட் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் கேரளா கிங்ஸ் அணி, 'ரி10' லீக் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற முதல் அணி என்ற பெருமை பெற்றது.

# இது கூட்டுமுயற்சிக்கு கிடைத்த வெற்றி

## இலங்கையுடனான ஒரு நாள் தொடர் குறித்து ரோகித் சர்மா



ஷ்ரேயாஸ் அய்யர் ஆட்டம் மிகவும் பிரமாதமாக இருந்தது எனவும் வீரர்களின் கூட்டு முயற்சியால் இலங்கையுடனான தொடரை வென்றதாகவும் இந்திய பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இலங்கை அணிக்கு எதிராக நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் நடந்த 3 ஆவது ஒருநாள் போட்டியிலும் வென்று இந்திய அணி தொடரை கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 44.5 ஓவர்களில் 215 ஓட்டங்களுக்கு சுருண்டது. உபுல் தரங்க அதிகபட்சமாக 95 ஓட்டங்கள் எடுத்தார். சஹால், குல்தீப் யாதவ் தலா 3, ஹர்த்திக் பாண்ட்யா 2 விக்கெட்டுக்கள் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய இந்திய அணி 32.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடக்க வீரர் தவான் அபாரமாக ஆடி 12ஆவது சதத்தை பதிவு செய்தார். அவர் 85 பந்தில் 100 (13 பவுண்டரி, 2 சிக்ஸர்) ஷ்ரேயாஸ் 63 பந்தில் 65 (8 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) ஓட்டங்கள எடுத்தனர்.

இந்த வெற்றி குறித்து இந்திய அணியின்பொறுப்புத்தலைவர் ரோகித் கூறியதாவது,

அணித் தலைவராக இருந்து ஒருநாள் தொடரை கைப்பற்றியது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. தரம்சாலாவில நடந்த முதல் போட்டியில் நாங்கள் மோசமாக தோற்றோம. அதில் இருந்து மீண்டு சிறப்பாக விளையாடி தொடரை கைப்பற்றி உள்ளோம்.

முதல் போட்டி எனக்கு சோதனையாக இருந்தது. 2ஆவது போட்டியில் கனிசமான ஓட்டங்களை குவித்தோம். இந்த போட்டியை வென்றதன் மூலம் அணித் தலைவராகவும் சிறப்பாக செயல்பட்டு இருக்கிறேன். இனி 20 ஓவர் போட்டியிலும் கவனம் செலுத்துவோம்.

வீரர்களின் கூட்டு முயற்சியால இந்த தொடரை வென்றோம. ஷ்ரேயாஸ் ஆட்டம் மிகவும் பிரமாதமாக இருந்தது. துடுப்பாட்டத்தில் பல்வேறு எண்ணங்களை கொண்ட அவர் பயம் இல்லாமல் சிறப்பாக ஆடுகிறார்.

இந்திய அணி இதே உத்வேகத்துடன் விளையாடி வெளிநாட்டு மண்ணிலும் தொடரை வெல்ல வேண்டும். வெளிநாட்டில் வெற்றி பெறுவது அவசியமானது என்றார்.


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2018ஆம் ஆண்டுக்கான பகிரங்க ஏல அறிவித்தல்

01. இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம்
02. காலம் :- 28.12.2017ஆம் திகதி வியாழக்கிழமை
மு.ப. 10.30 மணி

### 2018ஆம் ஆண்டு இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த ஏலத்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01. | மாட்டிறைச்சிக்கடை - இல. 02 | 1,747,597.50 | 17,500.00 |
| 02. | ஆட்டிறைச்சிக்கடை - இல. 01 | 589,530.15 | 6,000.00 |
| 03. | ஆட்டிறைச்சிக்கடை - இல. 02 | 589,530.15 | 6,000.00 |
| 04. | கோழி இறைச்சிக்கடை - இல. 01 | 1,417,427.55 | 15,000.00 |
| 05. | கோழி இறைச்சிக்கடை - இல. 02 | 1,417,427.55 | 15,000.00 |

குறிப்பு:-
பகிரங்க ஏலத்தில் பங்குபெறுபவர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையினை 28.12.2017 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் சபையில் செலுத்துதல் வேண்டும். பகிரங்க ஏலத்தில் சித்தி பெறுபவர் கேள்வித் தொகையின் 2/3 பகுதியை (வரிகள் உட்பட) உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும். கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இவ் ஏலத்தில் பங்குபற்ற முடியாது. இந்நகராட்சி மன்றத்தின் கடைகளிலிருந்து 1KM சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
18.12.2017
(C-746)

திரு.கா.சண்முகதாசன
செயலாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி

# இறுதிப்போரில் சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரியிடம் பிரிட்டன் எம்.பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போரின் போது அரச படையினரிடம் சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**




தமிழர் தாயகப் பகுதியில் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் காணாமல் ஆக்கப் பட்ட தமது உறவுகள் குறித்த உண்மையை வெளிப்படுத்து மாறு கோரி முன்னெடுக்கப்ப டும் ஆர்ப்பாட்டங்கள், 300 நாட்களை கடந்துள்ளன. இந்நிலையில், இலங்கை ஜனாதிபதிக்கு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் கள் இக்கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

300 நாட்கள் கடந்துள்ள போதும், காணாமல் ஆக்கப் பட்டவர்கள் தொடர்பில் எவ் வித காத்திரமான முன்னெடுப் புக்களும் மேற்கொள்ளப்பட வில்லையென பிரித்தானியா வின், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளு மன்ற குழுவின் தலைவர் Paul Scully தெரிவித்துள் ளார்.

எனினும், அச்சுறுத்தல்க ளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் வயதான காலத்தி லும் இம்மக்கள் மன தைரியத்தை கைவிடாமல் போராடி வருவது பாராட்டத் தக்க விடயமென தெரிவித்தார்.

பல பாதிப்புக்களை சந்தி த்த தமது நாட்டு பிரஜைக ளின் மீது அரசாங்கம் காட் டும் பாகுபாடானது அதிர்ச்சி யூட்டுவதாக அமைந்துள்ள தென்றும் அவர் தெரிவித் தார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கான போரா ட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின் னர், போராட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் இதுவரை உயிரிழந் துள்ளனர்.

இந்நிலையில், காணா மல் போனோர் விடயத்தில் தான் விரைந்து செயற் படுவதாக கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி மைத்திரி உறு தியளித்தார்.

எனினும் ஜனாதிபதியின் வாக்குறுதி நிறை வேற்ற ப்படாமை துரதிர்ஷ்ட வச மானதென Paul Scully தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் நீண்ட கால வாக்குறுதியான காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த அலு வலகத்தினை அமைக்கும் நடவடிக்கை இழுத்தடிக்கப்படு வதானது, உறவினர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ள தென்றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந்நிலையில், சரண டைந்தவர்களின் பெயர் பட்டி யலை இனியும் தாமதிக்காது உடன் வெளியிட வேண்டு மென கோரியுள்ளதோடு, காணாமல் ஆக்கப்பட்ட உறவி னர்களது போராட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளிப் பதாகவும் Paul Scully தெரிவித்தார். (இ)


# சிறந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாம் உங்களுக்கு உதவுவோம்

**இலங்கை மத்திய வங்கியின் முன் முயற்சி**

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சிப் பிரதேச அலுவலகம் நிதியியல் தொடர்பான விடயங்களில் வடபகுதி மக்களுக்கு உதவும் பொருட்டு உதவிப்பீடமொன்றினை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையின் நிதியியல் துறையின் உச்ச நிறுவனம் என்ற ரீதியில் வட மாகாணத்தில் வசிக்கும் மக்களின் நிதியியல் தொடர்பான விடயங்களைத் தீர்த்துக்கொள்வதற்கான தேவையினை இலங்கை மத்திய வங்கி விளங்கிக் கொண்டுள்ளது. எனவே, வழிகாட்டல்களைப் பெறுவதற்கு உதவிப்பீடங்களை நாடுகின்ற மக்களை ஊக்குவிப்போம்.

**021-2285915**

பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி, இலங்கை மத்திய வங்கி, அறிவியல் நகர், கிளிநொச்சி

தொலைநகல் : 021-2285911 மின்னஞ்சல் : helpnp@cbsl.lk



இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம் பொது மற்றும் வங்கி விடுமுறை தவிர்ந்த வாரம் ஐந்து நாட்களும் மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.15 மணிவரை திறந்திருக்கும்.

## இவ்வருடம் இம்மாதத்தில் மட்டும்

# 13 நாட்களில் 311 டெங்கு நோயாளர்கள் யாழ்.குடாநாட்டில் இனம் காணல்

(யாழ்ப்பாணம்)

**யாழ் குடாநாட்டில் இவ்வருடம் இந்த மாதம் 13 ஆம் திகதி வரை 311 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. இதேவேளை யாழ். மாவட்டத்திலேயே இம்முறை டெங்கு நோய்த்தாக்கம் தீவிரமடைந்துள்ளது. இந்த வருடம் 6 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார்கள். இது கடந்த வருடத்தை விட அதிகளவான பாதிப்பாக காணப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் இந்த மாதம் 13 ஆம் திகதி வரை 311 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த நவம்பர் மாதம் 480 பேர் டெங்கு நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இந்த வருடம் 4 உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களை விட யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் தொற்று அதிகரித்து காணப்படுவதால் இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு விதமான செயற்றிட்டங்கள் சுகாதார துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசேடமாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப் பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப் பழை ஆகிய சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகளிலும் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நுளம்பு பெருக்கம் ஓரளவு கட்டுப்பாடடுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-9)

# ஒப்பரேசன் பவானுக்கு பயன்படுத்திய எம்.ஐ-8 உலங்குவானூர்திகளை நீக்கியது இந்திய விமானப்படை





இலங்கையில் 'ஒப்பரேசன் பவான்' நடவடிக்கைக்காக இந்தியப் படையினர் பயன்படுத்திய ரஷ்ய தயாரிப்பான எம்.ஐ.-8 உலங்குவானூர்திகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

1972ஆம் ஆண்டுதொடக்கம், கடந்த 45 ஆண்டுகளாக உலங்குவானூர்திகளை இந்திய விமானப்படை பயன்படுத்தி வந்தது. இந்த உலங்கு வானூர்திகள் நேற்று முன் தினம் பிற்பகல் பெங்களூர் ஜலகங்கா விமானப்படைத் தளத்தில் நடந்த நிகழ்வுடன் சேவையில் இருந்து நீக்கப்பட்டன.

இந்திய விமானப்படை 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 107 உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தி வந்தது.

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகளின் போதும், கார்கில் போரின் போதும் இந்த உலங்குவானூர்திகள் முக்கிய பங்காற்றின.

இந்திய- இலங்கை உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்கு முன்னதாக, 1987ஆம் ஆண்டு, ஜூலை மாதம், சுதுமலையில் தரையிறங்கிய இந்திய விமானப்படையின் எம்.ஐ-8 உலங்குவானூர்தி, விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை சென்னைக்கு அழைத்துச் சென்றிருந்தது.

1987ஆம் ஆண்டு, 'ஒப்பரேசன் பவான்' நடவடிக்கையின் ஒரு கட்டமாக, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில்எம்.ஐ-8 உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட பரா கொமாண்டோக்களின் அணியொன்று விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

அந்த அணியைச் சேர்ந்த கோர்க்கா சிங் என்ற இந்தியப் படைச் சிப்பாய் மாத்திரமே உயிர் தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உலங்குவானூர்திகள் இந்திய விமானப்படையினால் முக்கிய- மிக முக்கிய பிரமுகர்களின் பயணங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## இராசி பலன்

19.12.2017
மார்கழி 04, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
பிரதமை பிற்பகல் 2.28 மணிவரை
மூலம் முற்பகல் 10.30 மணிவரை
சுபநேரம் 10.53-12.23 மணிவரை
இராகுகாலம் 3.23-4.53 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம் | | ராகு |
| கேது | | | |
| சூரி, சனி, சந் | சுக் புத | குரு செவ் | |

**மேடம்:** அகன்றுதத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள் பெரிய மனிதர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** அல்லல்கள் தீர அம்பிகையை வழிபடவேண்டிய நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பகையொன்று நட்பாகலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கன்னி:** கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள்.

**மகரம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், திட்டங்களில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும்.

# உரமானியம் வழங்க காலதாமதம் விவசாயிகளுக்குக் கடன்சுமை

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான உரமானியக் கொடுப்பனவு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கடன் சுமைக்கு உட்பட்டுள்ளதாக வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்குப் பயன்படுத்த வேண்டிய உரக் கொள்வனவுக்கான மானியத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் இடுவதாக தெரிவிக்கப்பட்டது.

அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை குறிப்பாக நல்லூர் பிரதேச விவசாயிகளுக்கு குறித்த மானியம் வழங்கப்படவில்லை.

நெற்பயிருக்கு உரம் போட வேண்டிய காலம் முடிவுறுவதால் விவசாயிகள் இந்த மானியத்தை நம்பி கடன்பட்டு உரத்தைக் கொள்வனவு செய்துள்ளனர். இந்த மானியம் இலங்கை வங்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு தற்போது கிடைத்துள்ள போதும் மக்கள் வங்கி கணக்கு உள்ளவர்களுக்கு இதுவரை வைப்பிலிடப்படவில்லை. இதனால் விவசாயிகள் மிகவும் கஷ்ட நிலையில் உள்ளதாகவும் கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து கமநல சேவை திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த கொடுப்பனவுக்காக பயனாளிகள் கட்டம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு பெயர்ப்பட்டியல்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக ஒரு வங்கியிலும் இரண்டாம் கட்டமாக மற்றைய வங்கியிலும் வைப்பு செய்யப்படும் எனத் தெரிவித்தனர். (இ-9)

# தேங்காய் கட்டுப்பாட்டு விலையை மீறிய 250 வியாபாரிகள் நீதிமன்றத்தில்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகவிலையில் தேங்காய் விற்பனை செய்த 250 பேருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வாரத்தில் கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 60 வியாபாரிகள் பிடிபட்டதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேங்காய்ஒன்றின்அதிகபட்ச சில்லறை விற்பனை விலை 75 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சில வியாபாரிகள் 80 ரூபா முதல் 120 ரூபா வரையில் அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து கடந்த வாரம் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன்போதே 250 வியாபாரிகள் பிடிபட்டுள்ளதாகவும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:26
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc/லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8069

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 49 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Diploma/ அவுஸ்ரேலிய குடியுரிமை
தொ.இ: B/8070

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L/கடை
தொ.இ: B/8073

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 6'
தகைமை/தொழில்Diploma/அரசதொழில்
தொ.இ: B/8074

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 10 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/7365

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: சூரி செவ் 5 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் பட்டதாரி/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7368

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 49
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7369

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 26
தகைமை/தொழில்: BFA/ஆசிரியர்
தொ.இ: G/7371

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



உ



இணுவில் திருப்பதி
## அருள்மிகு ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலயம்
### புகழ்மிக்க ஸ்ரீ சனீஸ்வரபகவான் தனிப்பரிகார சந்நிதி
# சனிப்பெயர்ச்சி திருவிழா

நாள்: 19.12.2017 செவ்வாய்க்கிழமை, காலை 10.01 மணிக்கு

அன்புடையீர்,

நிகழும் சுபமங்கள ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் 4ஆம் திகதி (19.12.2017) செவ்வாய்க்கிழமை காலை 10.01 மணிக்கு ஸ்ரீ சனீஸ்வர பகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசு ராசிக்கு சுத்தவாக்கிய பஞ்சாங்க முறைப்படி பிரவேசித்து பக்தர்களுக்கு அருளுகிறார். அன்று ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு விஷேட அபிஷேக அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெற்று சுவர்ண அலங்காரத்துடன் தரிசனம் நடைபெறும்.காலை 10.30 மணி முதல் சனீஸ்வர பரிகார சாந்திஹோமம் ஆரம்பமாகி மாலை 6.00 மணி வரை தொடர்ந்து நடைபெறும். இப் பரிகாரத்தில் அடியார்கள் பங்குபற்றி சனீஸ்வர தோஷ பரிகார நிவர்த்தி செய்ய முடியும்.

**இந்த சனிப்பெயர்ச்சியால் அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு**

மேஷம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1பாதம் மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால் மிகவும் நன்மையான பலன்கள் ஏற்படும்.

ரிஷபம்: கார்த்திகை 2,3,4ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம் மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு அஷ்டம சனியாக இருப்பதால் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

மிதுனம்: மிருகசீரிடம் 3,4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏழாம் இடத்து (கண்டக சனி) நடைபெறுவதால் இவர்கள் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

கடகம்: புனர்பூசம் 2,3,4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஆறாம் இடத்தில் சனி வருவதால் நன்மையான பலன்கள் உண்டாகும்.

சிம்மம்: மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஐந்தாம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வருவதால் நன்மையான பலன்கள் உண்டாகும்.

கன்னி: உத்தரம் 2, 3, 4ஆம் பாதம், ஹஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு நான்காம் இடம் அர்த்தாஷ்டம சனி நடைபெறுவதால் இவர்கள் பரிகாரம் செய்வது நல்லது.

துலாம்: சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மூன்றாம் இடத்திற்கு வருவதால் ஏழரை சனி நிறைவுற்று மிகவும் நன்மையான பலன்கள் நடைபெறும்.

விருச்சிகம்: விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை. மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இரண்டாம் இடத்திற்கு சனி பகவான் வருவதால் இவர்கள் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

தனுசு: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்.மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஜென்ம சனி நடைபெறுவதால் இவர்கள் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

மகரம்: உத்தராடம்2,3,4ஆம் பாதம்,திருவோணம், அவிட்டம், 1,2ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு விரய ஸ்தானமான 12ஆம் இடம் (ஏழரை சனி) வருவதால் பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

கும்பம்: அவிட்டம் 2,3,4ஆம் பாதம் சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம். மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 11ஆம் இடமான இலாப ஸ்தானத்திற்கு வருவதால் மிகவும் நன்மையான பலன்கள்.

மீனம்: பூரட்டாதி4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி. மேற்படி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 10ஆம் இடமான ஜீவன ஸ்தானத்திற்கு வருவதால் மிக நன்மையான பலன்கள் நடைபெறும்.

(சி-740)

தொ.பே: 021 224 2300, 077 837 6896 குறிப்பு: அடியார்கள் நளபுஸ்கரணியில் அன்று முழுவதும் நீராடி பரிகாரம் செய்ய முடியும். ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்

# மன்னார் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஐந்திலும் 66 ஆயிரத்து 94 பேர் வாக்களிக்கத் தகுதி

## 94 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, முசலி பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தலில் இம்முறை வாக்களிப்பதற்கு 66 ஆயிரத்து 94 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இருந்து 54 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 94 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

மன்னார் நகர சபை இதன்படி மன்னார் நகர சபைக்கு 7 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 14 வாக்கெடுப்பு நிலையங்களில் 14 ஆயிரத்து 770 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கு அமைவாக உப்புக்குளம் பிரிவில் 3 ஆயிரத்து 73 பேரும், பள்ளிமுனை பிரிவில் 2 ஆயிரத்து 123 வாக்காளர்களும் எழுத்தூர் பிரிவில் 2 ஆயிரத்து 879 வாக்காளர்களும் சாவக்கட்டு பிரிவுக்கு ஆயிரத்து 906 நபர்களும் சௌத்பார் பிரிவில் 2 ஆயிரத்து 342 பேரும், பனங்கட்டுகொட்டு பிரிவில் ஆயிரத்து 592 நபர்களும், பெற்றா பிரிவில் 855 நபர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை மன்னார் பிரதேச சபைக்கு 11 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 22 வாக்கெடுப்பு நிலையங்களில் 22 ஆயிரத்து 468 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் தலைமன்னாரில் ஆயிரத்து 203 வாக்காளர்களும் தலைமன்னார் பியர் கிழக்கில் 2 ஆயிரத்து 78 நபர்களும் துள்ளுக்குடியிருப்பு பிரிவில் ஆயிரத்து 22 பேரும் பேசாலையில் (முதலாம் வட்டாரம் முதல் ஏழாம் வட்டாரம் வரை) ஆயிரத்து 808 நபர்களும் பேசாலை தெற்கு ஆயிரத்து 807 பேரும், சிறுத்தோப்பு பிரிவில் 2 ஆயிரத்து 332 நபர்களும், புதுக்குடியிருப்பு பிரிவில் ஆயிரத்து 482 நபர்களும், எருக்கலம்பிட்டி பிரிவில் 2 ஆயிரத்து 888 வாக்காளர்களும், தாழ்வுபாடு பிரிவில் 2 ஆயித்து 699 நபர்களும், தாராபுரம் பிரிவில் ஆயிரத்து 560 நபர்களும், உயிலங்குளம் பிரிவில் 3 ஆயிரத்து 562 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நானாட்டான் பிரதேச சபை நானாட்டான் பிரதேச சபைக்கு 8 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 23 வாக்கெடுப்பு நிலையங்களில் 15 ஆயிரத்து 702 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதன்பிரகாரம் வங்காலை வடக்கில் ஆயிரத்து 917 வாக்காளர்களும் வங்காலை பிரிவில் 2 ஆயிரத்து 26 பேரும் நானாட்டான் பிரிவில் ஆயிரத்து 678 நபர்களும் வாழ்க்கைபெற்றான்கண்டல் பிரிவில் 2 ஆயிரத்து 577 பேரும் இலகடிப்பிட்டி பிரிவில் 2 ஆயிரத்து 313 பேரும் முருங்கன் பிரிவில் 2 ஆயிரத்து 40 நபர்களும் கற்கடந்தகுளம் பிரிவில் ஆயிரத்து 202 பேரும் கட்டையடம்பன் பிரிவில் ஆயிரத்து 999 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்

மாந்தை மேற்கு பிரதேச சபை- மாந்தை மேற்கு பிரதேச சபை பிரிவுக்கு 13 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 21 வாக்கெடுப்பு நிலையங்களில் 18 ஆயிரத்து 636 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அதற்கு அமைவாக வெள்ளாங்குளம் பிரிவில் ஆயிரத்து 721 வாக்காளர்களும் பெரியமடு பிரிவில் 2 ஆயிரத்து 57 நபர்களும் இலுப்பைக்கடவை பிரிவில் 1515 பேரும், விடத்தல்தீவு பிரிவில் 2 ஆயிரத்து 126 நபர்களும் நெடுங்கண்டல் பிரிவில் ஆயிரத்து 493 பேரும் ஆட்காட்டிவெளி பிரிவில் ஆயிரத்து 501 நபர்களும் அடம்பன் பிரிவில் ஆயிரத்து 504 பேரும் வட்டக் கண்டல் பிரிவில் ஆயிரத்து 973 நபர்களும், மடு பிரிவில் ஆயிரத்து 769 பேரும், இரணை இலுப்பைக்குளம் பிரிவில் ஆயிரத்து 308 பேரும் காக்கியான் குளம் பிரிவில் ஆயிரத்து 669 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

முசலி பிரதேச சபை- முசலி பிரதேச சபை பிரிவில் 10 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 14 வாக்கெடுப்பு நிலையங்களில் 14 ஆயிரத்து 518 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவற்றில் அரிப்பு மேற்கு பிரிவில் 877 வாக்காளர்களும் அரிப்பு கிழக்கு பிரிவில் 532 நபர்களும் பண்டாரவெளி பிரிவில் ஆயிரத்து 493 பேரும் புதுவெளி பிரிவில் 894 நபர்களும், சிலாபத்துறை பிரிவில் ஆயிரத்து 801 பேரும் அகத்திமுறிப்பு, கூழாங்குளம் பிரிவில் 1846 நபர்களும் பொற்கேணி பிரிவில் ஆயிரத்து 299 பேரும், மருதமடு, வேப்பங்குளம் பிரிவில் 2ஆயிரத்து 73 நபர்களும் கொண்டச்சி பிரிவில் ஆயிரத்து 757 பேரும் பாலைக்குழி பிரிவில் 1946 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# புகையிரத கம்பத்துடன் மோதுண்ட மோ.சைக்கிள் இரண்டாகப் பிளவு

## இளைஞன் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா, ஈரப்பெரிய குளம் பகுதியில் உள்ள புகையிரதக் கம்பத்துடன் மோதி மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்துள்ளதாக ஈரப்பெரிய குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும்தெரியவருவதாவது.

வவுனியா, ஈரப்பெரியகுளம், அவுசப்பிட்டிய பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து புகையிரத பாதையில் இருந்த கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது தூக்கி வீசப்பட்ட மோட்டர் சைக்கிள் இரண்டாக உடைவுற்ற நிலையில் முன்னே சென்ற காருடன் மோதி மீண்டும் விபத்துக்குள்ளானது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையிலேயே குறித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இவ்விபத்தின் போது இதில் பயணித்த 25 வயதுடைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-250)

# வவுனிக்குளத்தில் மீன்குஞ்சுகளை விடுவித்து மீன் பெருக்கத்தை அதிகரிக்க உதவுங்கள்

## அம்பாள்புர கிராம மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் உள்ள நன்னீர மீன்பிடித்தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாக வவுனிக்குளத்தின் கீழ் அம்பாள்புரம் கிராமத்தில் வசித்து வருகின்ற சுமார் 80 இற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள்தமது வாழ்வாதாரத் தொழிலை முன்னெடுத்து வருகின்றன.

கடந்த கால வரட்சியின் போது இக்குளத்தின் நீர் மட்டம் வேகமாகக் குறைவடைந்துள்ளதுடன், மீன்பிடித்தொழிலும் முழுமையாக பாதிக்கப்பட்டது,

இந்நிலையில் தற்போது குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளபோதும், இதில் புதிய மீன்குஞ்சுகளை விடுவித்து மீன்பெருக்கத்தை அதிகரிக்க வேண்டுமென இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை இக்குளத்தில் மீன்பிடித் தொழிலுக்காக அம்பாள்புரத்தில் இருந்து வவுனிக்குளம் வரை செல்லும் வீதியானது இது வரை புனரமைக்கப்படாது இருக்கின்றது.

எனவே இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)



# 'புதிய யாப்பு சீர்திருத்தம்' தொடர்பில் கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

"புதிய யாப்பு சீர்திருத்தம்" தொடர்பில் மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் குழுக்களின் செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் மன்னார் சர்வோதயத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட சர்வோதய நிலையத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் தற்போது மேற்கொள்ளப் படுகின்ற "யாப்பு சீர்திருத்த முறை" தொடர்பாக மக்களை தெளிவுபடுத்துவதை பிரதான நோக்கமாக கொண்டு புதிய யாப்பு சீர்திருத்த கலந்துரையாடல் சர்வோதய தேசோதய பிரிவினூடாக நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் சர்வோதயத்தில் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது சர்வோதய தேசோதய தேசிய இணைப்பாளர் நிஸாந்த பிரித்திராஜ் மற்றும் சர்வமத தலைவர்கள், கிராம மட்ட தலைவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது புதிய யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதோடு குறித்த யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளிடம் விரிவான விளக்கத்தையும் மக்களின் கோரிக்கைகளையும் முன்வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நேரத்தில் கலந்துரையாடலில் கலந்து கொள்ளாத நிலையில் கலந்து கொண்ட மக்கள் குழுக்களின் செயற்பாட்டாளர்கள் தமது கருத்துக்களுக்கு தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாட்டுக் குழுவினரிடம் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஆரம்ப சுகாதார நிலையத்தின் சேவையை மீள ஆரம்பியுங்கள்

## கெங்காதரன் குடியிருப்பு மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்புப் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் யுத்த காலத்தில் சேதமடைந்த நிலையில் மீள்புனரமைப்பு செய்ய முடியாது பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன் பிரதேசத்தின் தேவை கருதி ஏற்கனவே அமைக்கப்பட்ட சுகாதார நிலையமானது இவ்வாறு சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனைப் புனரமைத்து இதன் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# 5.70 மில்லியன் ரூபா செலவில்

## மாற்றுத்திறனாளிகளுக்கு மலசல கூடங்கள், பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்படுகிறது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சினது நிதியொதுக்கீட்டின் கீழ் 5.70 மில்லியன் ரூபா செலவில் மாற்றுத்திறனாளி களுக்கான மலசலகூடங்கள், பேருந்துத்தரிப்பிடங்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

2017ஆம் ஆண்டின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் மீன்பிடி போக்குவரத்து அமைச்சினூடாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்ட நிதியின் மூலம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் நான்கு பேருந்துத் தரிப்பிடங்களும் இரண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதாவது தலா 0.50 மில்லியன் ரூபா செலவில் கரடிப்போக்குச் சந்தியில் ஒரு பேருந்துத்தரிப்பிடம், கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகில் ஒரு பேருந்துத்தரிப்பிடம், தட்டுவன்கொட்டியில் ஒரு பேருந் துத்தரிப்பிடம், கோவிந்தன் கடைச்சந்தியில் ஒரு பேருந்துத் தரிப்பிடம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை முழங்காவில் பகுதியில் 1.90 மில்லியன் ரூபா செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மலசல கூடமொன்றும் பளைப்பகுதியில் 1.30 மில்லியன் ரூபா செலவில் ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கான மலசல கூடமும் அமைக்கப்பட்டு வருகின்றன என வீதி அபிவிருத் தித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நபர் பொலிஸாரால் கைது



(பனிக்கன்குளம்)

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் நகைக் கடை ஒன்றில் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டிலும் இன்னும் பல்வேறுபட்ட குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு வந்த நபர் ஒருவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

பல்வேறு குற்றச்சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் பிரஸ்தாப நபர் மீது.வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கிரிமினல் குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் கஞ்சா கடத்தல், தொலைபேசிக்கொள்ளை போன்றன உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணம் இளைவாலையைச் சேர்ந்த கைதான குறித்த நபர் தண்ணீரூற்று புதறிகுடாப் பகுதியிலுள்ள ஒருவரின் 'வீட்டுடன் நீண்டகாலமாக தொடர்பைக் கொண்டுள்ளார். இந்த வீட்டாரின் உதவியுடன் தண்ணீரூற்று பகுதியிலுள்ள நகைக்கடை ஒன்றில் நகையைத் திருடி இவர்களிடம் கொடுத்துள்ளார்.

இந் நிலையில் கடந்த 15 ஆம் திகதி பிரஸ்தாப நபரை கைதுசெய்த முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் திருட்டுச் சம்பவத்தை ஒப்புக்கொண்டுள்ளதுடன் இந்த நபருக்கு உதவி புரிந்த குறித்த பகுதியைச் சேர்ந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டு கடந்த 16 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

திருட்டில் ஈடுபட்ட நபருக்கு உதவிபுரிந்த நால்வரும் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் பிரஸ்தாப நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். திருட்டில் ஈடுபட்டவர் மீது ஐந்திற்கு மேற்பட்ட கொள்ளைக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் இந்தச் திருட்டுச் சம்பவத்தையும் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன்போது ஒரு பவுண் தாலி, அரை பவுண் கொண்ட இரண்டு காசுகள், தோடு 3 சோடிகள் உள்ளிட்ட நகைகளும் 25 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முள்ளியவளை பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ் அனுர தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு அரசியல் விழிப்பூட்டும் செயற்றிட்டம்

## பெண்கள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் பங்கேற்பு



(குருமன்காடு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு அரசியல் ரீதியில் விழிப்பூட்டும் செயற்றிட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஒன்றிணைந்து பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பெண்கள் குழுவினால் இவ் விழிப்பூட்டல் செயலமர்வு நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாகவே வவுனியாவிலும் இடம்பெற்றது.பெண்கள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் விழிப்பூட்டும் செயற்றிட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விழிப்பூட்டல் செயலமர்வை முன்னெடுத்திருந்தார். இதில் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடவுள்ள பெண்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பெண்கள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் கருத்துக் கூறுகையில்,

நாட்டில் 53 சதவீதமாக உள்ள பெண்கள் அரசியலிலும் முன்னுக்கு வந்து



தமக்கு எதிரான பிரச்சினைகளுக்கு அவர்களே குரல்கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (2-250)

# அலரி விதை உட்கொண்டதில் இளம் குடும்பப் பெண் மரணம்

(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரப் பகுதியில் அலரி விதை அரைத்து உண்ட இளம் குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

அலரி விதையை அரைத்து உண்ட நிலையில் முல்லை.மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஜெ.பிறின்சிகா (வயது-24) என்ற இளம் குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது உடலம் முல்லை.மாவட்ட வைத்தியசாலையில் மரண விசாரணை அதிகாரியின் மருத்துவ அறிக்கையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (2-281)

# வவுனியாவில் இரு சபைகளில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது ஐ.தே.க



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் இரு சபைகளில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து சபைகளில் முதல் கட்டமாக வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய இரு சபைகளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணமே செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.ஜெயதிலக, ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கருணாதாச, வவுனியா வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மு.சுப்பிரமணியம், இணை ஒருங்கிணைப்பாளர் தம்பாபிள்ளை பிறமேந்திரராஜா உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.(2-250)




# கிளிநொச்சியில் முதலாவது வேட்பு மனுத் தாக்கல்



(பரந்தன்)

கிளிநொச்சியில் நேற்று முதலாவது வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையிலான சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் சார்பாக சுயேட்சைக் குழு நேற்று தனது வேட்பு மனுவை கிளிநொச்சியில் தாக்கல் செய்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி , பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைளுக்கும் மேற்படி குழு சுயேட்சையாகப் போட்டியிடுகின்றது.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மக்கள் ஒரு வினைத்திறன் மிக்க பிரதேச சபையை ஏற்படுத்த விரும்புகின்றனர். கடந்த காலங்கள் போன்று பிரதேச சபைகளின் செயற்பாடுகள் இருக்கக் கூடாது என மக்கள் விரும்புகின்றனர். எனவே தான் அவர்கள் இந்த முறை தங்களின் வட்டாரங்களிலிருந்து சிறந்த மக்கள் பணியாற்றக் கூடிய பிரதிநிதிகளை எமக்கு தெரிவு செய்து வழங்கியுள்ளனர்.

எனவே நாம் பிரதேச சபை களின் அதிகாரத்திற்கு வரு கின்ற போது மக்களின் விருப் பத்திற்கு அமைவாக வினை திறன் உள்ள சபையாக மாற்றி செயற்படுத்தி காட்டுவோம் எனத் தெரிவித்தார். (2-312)

# ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி




(பனிக்கன்குளம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி நேற்று திங்கட்கிழமை மதியம் மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் றிப்கான் பதியுதீன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் அலிக்கான் செரீப்.அமைச்சரின் செயலாளர் முஜாகிர்,ஐக்கிய தேசியக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம். பஸ்மி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை. மன்னார் பிரதேச சபை,நானாட்டான் பிரதேச சபை,முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் போட்டியிடுவதற்கு சுயேட்சை குழு ஒன்று நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

சுயேட்சைக் குழுவின் பொது வேட்பாளர் நிகால் நிர்மலராஜ் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# மாவட்ட செயலகங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு



(பனிக்கன்குளம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் படவுள்ள நிலையில் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டச் செயலகங்களுக்கு நேற்று திங்கட்கிழமை காலை முதல் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் வீதிக்கு அருகில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் மாவட்டச் செயலகத்தினுள் அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் மட்டும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதோடு ஏனைய வாகனங்கள் வெளியில் நிறுத்தப்படுகிறது. அத்தோடு உடைமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.இதேவேளை மன்னார் மாவட்டச் செயலகத்திற்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுவருகின்றனர்.

மேலும் மாவட்டச் செயலகத்தினுள் செல்பவர்களது உடைமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 21 ஆம் திகதி நண்பகலுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடையவுள்ளது.இந்த நிலையிலே மாவட்டச் செயலக பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020

## பதினோராமிடத்தில் சனி! பணவரவுதான் இனி!



எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் நினைக்கும் கும்ப இராசி வாசகர்களே!

அனுபவத்தின் வாயிலாக அனைத்தையும் அறிந்து கொள்ள முடியும் என்று சொல்லும் உங்களுக்கு இதுவரை 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இனி பதினோராம் இடத்தில் அடியெடுத்து வைக்கப்போகின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், விரய ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சனிபகவான். அவர் லாப ஸ்தானத்திலிருந்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சந்தோசம் தரும் பெயர்ச்சியாகவே அமையப் போகின்றது.

லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனியால் நற்பலன்கள் பெற, பெயர்ச்சி நாளிலேயே வழிபாடு செய்வது நல்லது. உங்கள் இராசிக்கு 10 ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானம் விருச்சிக இராசி ஆகும். எனவே, வீட்டில் விருட்ச (தாவர) வழிபாடுகளையும் நீங்கள் மேற்கொள்ளலாம்.

அந்த அடிப்படையில், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகில் கண்டரமாணிக்கம் உள்ளது. அதன் அருகில் உள்ள பெரிச்சிக்கோவில் என்ற ஊரில் வன்னிமரத்தடியில் வீற்றிருந்து சனி பகவான் அருள்வழங்குகிறார். வன்னி மரத்தடி தெய்வங்கள் எண்ணியதை நிறைவேற்றும் என்பர். அரசு மரம், வன்னி மரம், வேப்ப மரம், மகிழ மரம், வில்வ மரம் போன்ற சிறப்பு வாய்ந்த மரங்களுக்கு அடியில் வீற்றிருந்து அருள் வழங்கும் தெய்வங்களை வாய்ப்பிருக்கும் பொழுதெல்லாம் நீங்கள் வழிபாடு செய்யலாம். திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, குச்சானூர் போன்ற ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம்.

லாபத்தில் சனிதான் வந்தால்
நல்லதோர் தொழில்கள் வாய்க்கும்!
தேகத்தில் இருக்கும் நோய்கள்
சீக்கிரம் விலகி ஓடும்!
யோகங்கள் வந்து சேரும்!
யோசனைகள் வெற்றியாகும்!
மேகவண்ணச் சனியை நீங்கள்
மிகப் பணிந்து வணங்குவீரே!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

### இலாப ஸ்தான சனி என்ன செய்யும்?

மிகப்பெரிய கிரகம் என்று வர்ணிக்கப்படும் சனிபகவான் டிசெம்பர் 19 ஆம் திகதி முதல் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசியை மட்டுமல்லாமல் பாக்கிய ஸ்தானத்தையும், ஆயுள் ஸ்தானத்தையும் பார்க்கின்றார். ஆயுள்காரகன் ஆயுள் ஸ்தானத்தைப் பார்ப்பது யோகம் தான்.

சனி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உங்களுடைய செயற்பாட்டில் அதிகம் முயற்சிகளைக் காட்டியும், ஒருசில காரியங்கள் கைகூடாமல் போயிருக்கலாம். பிற இனத்தாரால் பிரச்சினைகள் வந்திருக்கலாம். தொழிலுக்காக வாங்கிய கடன் தொகை அதிகரித்து, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போயிருக்கலாம்.

மேலிடத்து நிர்ப்பந்தத்தின் விளைவாக அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்பட்டிருக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களைக் கேட்காமலேயே சில காரியங்கள் செய்ததன் விளைவாக பிரச்சினைகளை நீங்கள் சந்தித்திருக்கலாம். தாய், தந்தையரின் உடல் நலத்திற்காக ஒரு பெரும் தொகையைச் செலவிட்டும் பலன் தராமல் போயிருக்கலாம். இவை எல்லாம் 10இல் சனி வரும்பொழுது நடைபெற வேண்டிய நிகழ்வுகளாகும்.

இதுவரை அந்த இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது 11 ஆம் இடத்தில் இடப்பெயர்ச்சியாகும் பொழுது, மேற்கண்ட அனைத்திலும் இருந்து நீங்கள் விடுதலை அடையப்போகிறீர்கள். எதை எப்பொழுது செய்ய வேண்டும் என்று நினைத்தீர்களோ அதை அப்பொழுதே செய்து முடிப்பீர்கள். அதற்குத் தேவையான பொருளாதாரம் உங்கள் கைகளில் புரளும்.

சகோதர பாசத்தை நீங்கள் வளர்த்துக் கொண்டாலும் உங்கள் உடன்பிறப்புகள் உங்களோடு முழுமையாகப் பாசம் காட்டுவார்களா? என்பது சந்தேகம் தான். வெளிநாட்டு யோகம் ஒருசிலருக்கு வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள்.

இக்காலத்தில் விரயத்திற்கேற்ற தன லாபம் வந்து கொண்டே இருக்கும் என்பதால் காரியத்தை தொடங்கிவிட்டால் பணம் தானாக வந்து சேரும். குழந்தைகளின் கல்யாணச் சீர்வரிசைகள் வாங்குவதில் தீவிரம் காட்டுவீர்கள்.

உடன்பிறப்புகளின் குடும்பத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவீர்கள்.

வீட்டுப் பராமரிப்புச் செலவுகளை இது போன்ற காலங்களில் மேற்கொள்ளலாம். விவசாயத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் பண்ணை அமைத்துப் பராமரிக்கலாம். கால்நடைப் பராமரிப்பில் ஆர்வம் காட்டினாலும் கால்நடைகளை வாங்கி வளர்த்து வந்தாலும் அதன் மூலம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இலாபம் கிடைக்கும்.

### சனியின் பார்வை பலன்கள்!

உங்கள் இராசிநாதனாகவும் விரயாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் இந்தமுறை பெயர்ச்சியாகும் பொழுது 1, 5, 8 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து கொண்டே இருக்கும். பணம் கைக்கு வந்த மறுநிமிடமே செலவாகிவிடும் என்பதால் இந்த நேரத்தில் பெரும்தொகைகள் வரும்பொழுது உடனடியாக அதைப் பொருட்களாக மாற்றி அமைத்துக்கொள்வது நல்லது. ஆதாயம் தரும் தொழிலைத் தேர்ந்தெடுத்து மூலதனம் போடலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்குவது மட்டுமல்லாமல் அடகு வைத்த நகைகளையும் மீட்டுக்கொள்ளலாம்.

சனியின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் குழந்தைகளின் கல்வி மற்றும் கடல் தாண்டும் முயற்சிகளுக்காக எதிர்பார்ப்போடு இருந்தவர்களுக்கு அது நல்ல விதமாக நடைபெறும். பெண் பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் புதுமனை புகுவிழாக்களை நடத்திப்பார்ப்பீர்கள். பூர்வீக இடம் கையை விட்டுப் போனதே என்ற கவலை மாறச் சொந்த ஊரிலேயே இடம் வாங்கும் யோகமும் ஒரு சிலருக்கு உண்டு.


சனியின் பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இருந்த இடையூறுகள் அகலும். திடீர் இடமாற்றங்களையும், தொழில் மாற்றங்களையும் உருவாக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய பதவி உயர்வு கிடைக்கும்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!

4.10.2018 இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன்பிறகு 28.10.2019 இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார். இந்த இரண்டு குருப் பெயர்ச்சிகளும் உங்களுக்கு ஏற்படுத்தும் மாற்றங்களையும் ஏற்றங்களையும் பற்றிப் பார்ப்போம்.

முதலில் விருச்சிக இராசிக்கு குரு பெயர்ச்சியாகும் பொழுது அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே வாக்கு, தனம், குடும்பம், தாய், வாகனம், வீடு, எதிர்ப்பு, உத்தியோகம், உடல்நலம் போன்றவற்றில் எல்லாம் நல்ல பலன்களைக் கொடுக்கப் போகின்றது. குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வரன்கள் வாயில் தேடிவரும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தாயின் ஆதரவு கிடைக்கும். எதிரிகள் விலகுவர்.

தனுசு இராசிக்கு குருப்பெயர்ச்சியாகும் பொழுது அதன் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே, உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். நீண்ட நாட்களாகப் பேசிப்பேசி விட்டுப் போன திருமணம் இப்பொழுது விரைவில் முடியும்.




### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

13.2.2019இல் மிதுன இராசியில் இராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். உங்கள் இராசிக்கு 5இல் இராகுவும், 11இல் கேதுவும் சஞ்சரிப்பதால் நாகதோஷம் உருவாகின்றது.

பாக்கிய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கை வளமாக சிறப்பு பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். சொத்துகள் வாங்கும் பொழுது சரிபார்த்து வாங்குவது நல்லது. பத்திரப் பதிவில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மூத்த சகோதரத்தோடு மோதல்கள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

சிவாலயத்திற்குச் சென்று சனிக்கிழமை தோறும் சனி பகவான் சந்நிதியில் எள் தீபம் ஏற்றி அர்ச்சனைகள் செய்து வழிபட்டு வாருங்கள். வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப் பெருமான் சந்நிதியில் தேங்காய் உடைப்பது நல்லது. சிறப்பு வழிபாடாக காரைக்குடி அருகில் உள்ள நேமம் ஜெயங்கொண்ட சோழீஸ்வரர், சவுந்தரநாயகி அம்மனை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நினைத்த காரியங்கள் நிறைவேறும்.



### சனியின் வக்ர காலம்!

25.4.2018 முதல் 21.8.2018 வரை மூலநட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9.2019 வரை மீண்டும் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.

உங்கள் இராசிநாதன் சனி வக்ரம் பெறும் பொழுது எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்திலும் சரி, மற்ற இடத்திலும் சரி பிறர் கருத்தைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் தான் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். முன்கோபத்தின் காரணமாக முன்னேற்றப் பாதையில் சில தடைகள் உருவாகலாம். எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்துச் செய்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். மருத்துவச் செலவு கூடும். சனி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சகல நன்மைகளும் கிடைக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உங்கள் திறமை பளிச்சிடும். கணவன்-மனைவி உறவு கற்கண்டாய் இனிக்கும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள்.

பிள்ளைகளின் வளர்ச்சி பெருமைப்படத்தக்கதாக அமையும். வீடு வாங்கிக் குடியேறும் யோகம் உண்டு. பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்பும், தலைமைப் பதவியும் கிடைக்கலாம். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். சனி மற்றும் குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# யுத்த அனுபவ அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த கால யுத்தத்தில் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது 191 கெடட் வீர, வீராங்கனைகளுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யுத்தத்தை வெற்றிக்கொள்ள எமது இராணுவத்தினர் பல உயிர்த் தியாகங்களைச் செய்துள்ளதுடன் ஏனைய மனிதநேய செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அத்துடன் சுற்றாடல் பாதுகாப்பு, போதைப்பொருள் ஒழிப்பு ஆகியவற்றுக்கும் அவர்கள் தமது அர்ப்பணிப்புகளை வழங்கியுள்ளனர்.

எனவே கடந்த யுத்தத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு வலய மட்டத்தில் எழும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய புனரமைப்பு பணிகள் ஆரம்பம் விந்தன் நிதியொதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சன சமூக நிலையத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான பிரமான அடிப்படையிலான மூல தன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற் கொள்ளப் பட்டுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-9)

## புலிகளின் முகாமிருந்த இடத்தில் பெருந்தொகை கைக்குண்டுகள்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு – வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பகுதியிலிருந்து ஒரு தொகை கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இவை நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டன.

தகரப் பேணி ஒன்றில் அடைக்கப்பட்ட நிலையில் 18 கைக்குண்டுகள் காணப்பட்டதாக களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர். எம். பி.ஜெயகெலும் தெரிவித்தார்.

கைக்குண்டுகள் காணப்பட்ட காணி முன்னர் விடுதலைப் புலிகளின் முகாமாக காணப்பட்டு பின்னர் கைவிடப்பட்டதாகத் தெரிவித்தார். (இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1946 - 04 - 04 | 2017 - 11 - 20 |



### அமரர். சிவலை இலங்கையன் (இராசு)


20.11.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சிவலை இலங்கையன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 20.12.2017 நாளை புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகள்:
திருமதி விஜயா பரந்தாமன்
மருமகன்:
கந்தசாமி பரந்தாமன்

வல்லியாவத்தை
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

# மரண அறிவித்தல்கள்

## திரு.சிதம்பரப்பிள்ளை-பத்மநாதன் (Canon Photo Copy கடை உரிமையாளர்)



2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தும்பளை வீதி மணல் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் Canon Photo Copy கடையின் உரிமையாளரும் பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உப தவிசாளரும், அரிமாசங்க வடமராட்சிக் கிளையின் முன்னாள் தலைவரும் சமாதான நீதவானும் பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் முன்னால் தலைவரும் ஆகிய திரு.சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் அவர்கள் 18.12.2017 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், பாக்கியநாதன் (கனடா), பாலசரோஜா (கொழும்பு), பத்மாவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசிங்கம் (அமரர்), தில்லைநாயகி, காசிநாதன், தனலட்சுமி, திலகேஸ்வரி, கமலநாதன் (அமரர்), கிருஷ்ணன், நித்தியநாதன், கலாவதி, கௌரி, ரகுநாதன், அரியமலர், இராசமலர் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், புவனேஸ்வரி, பசுபதி, ஞானசுந்தரம், ராஜராஜேஸ்வரி, சறோஜினிதேவி, ஜெகநாதன், பரமேஸ்வரி, வித்தியாபதி, சத்தியவதி ஆகியோரின் மைத்துனரும், கீதாஞ்சலி (கனடா), Dr. ரமேஷ் (மாலைதீவு), ஹேமா (கொழும்பு), மிலானி (கனடா), திருமகள் பிரியதர்சனி, சஞ்சயன், பிரவீன், பிரசன்னா ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசுதேவன், உமாமகேஸ்வரன், ஷர்மினி, சிதம்பரநாதன், சுதாகரன், சிவந்தி, சியாமா, வசந்தி, சிவகுமார், ராஜ்குமார், ஞானபாலன், ரூபிகா, ரேவதி, மைதிலி, சங்கரன் வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அஞ்சலி, துளசி, கோபிகா, ஞானலோசன், லக்சிகா, மீனாட்சிவள்ளி, மாதுமை, மீனாட்சி, கௌசல்யா, ரிதுரன், அஸ்வின், சங்கீர்த்தனன், சங்கீதா, ஆர்த்தி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (19.12.2017) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி-741)

**மணல் ஒழுங்கை,**
**தும்பளை, பருத்தித்துறை.**

**தகவல்: மனைவி**
**TP:021 226 3802, 077 480 1774**

## அமரர் கந்தையா இராசதுரை



**தோற்றம்** 21.03.1945 **மறைவு** 18.12.2017

(ஓய்வுபெற்ற கிராம அலுவலரும் சமாதான நீதிவானும் ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத நடராச இராமலிங்க சுவாமி (சிவன் கோயில்) தர்மகர்த்தா சபையின் முன்னைனாள் செயலாளரும் தற்போதைய பொருளாளரும் சிவன் தேவஸ் தான அன்னதான சபை உறுப்பினரும் ஆவரங் கால் சிவசக்தி மணி மண்டப ஆலோசனை சபை உறுப்பினரும்)

சிவன் வீதி ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் கந்தையா இராசதுரை 2017.12.18 நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கலைவாணியின் அன்புக் கணவரும், சிவகணேசன் (ஈசன்-சுவிஸ்), சிவப்பிரியா (கனடா), சிவசங்கர், சிவகாமி (உதவிப் பிரதேச செயலாளர், செயலகம் கரைச்சி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவசங்கரி (சுவிஸ்), சிறீதரன் (கனடா), உமாக்காந்தன் (கணக்காளர் இலங்கை மின்சார சபை பிராந்திய அலுவலகம் வடமாகாணம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவஆர்த்தி, சிவஆர்த்தன் (சுவிஸ்), சியாம், சங்கவி, சாருகா (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும், மீனலோசனி (தேவி), இராதாகிருஸ்ணன் (ஓய்வுபெற்ற இ.போ.ச. பாதுகாப்பு முகாமையாளர், மட்டக்களப்பு) குணபூசணி ஆகியோரின் அன்புச் சகோதர னும், குமாரலிங்கம், காலஞ்சென்ற சண்முகநாதன், புஸ்பவதி, வரதராசா (சுவிஸ்), விஜய லட்சுமி (அவுஸ்திரேலியா), தியாகராசா (டென்மார்க்), தனலட்சுமி, யோகலட்சுமி (ஆசிரியர், இந்து தமிழ்கலவன் பாடசாலை, புத்தூர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி,**
**ஆவரங்கால்.** (1867)

**தகவல்: குடும்பத்தினர்.**
**TP: 021 205 8101**




# அமெரிக்காவின் அட்லாண்டா விமான நிலைய மின்தடையால் ஆயிரம் விமானங்கள் இரத்து



(நியூயோர்க்)

உலகில் மிகப் பிரபல்யமான விமான நிலையங்களில் ஒன்றான அமெரிக்காவின் அட்லாண்டா விமான நிலையத்தில் ஏற்பட்ட மின்தடை காரணமாக 1000 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் அட்லாண்டா நகரில்சர்வதேச விமான நிலையம் உள்ளது. ஒரு நாளைக்கு 2500 விமானங்கள் இரண்டரை இலட்சம் பயணிகள் வரை கையாளும் இந்த விமானம் உலகின் மிகப் பிரபலமான விமான நிலையங்களில் ஒன்றாகும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் விமான நிலையத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத்தில் தடை ஏற்பட்டது. இதன் காரணமாக விமான நிலையம்முழுவதும்கணனிசேவைகள், தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முடங்கின. இதனால், 1000 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

விமானங்கள் இரத்தானதால் பல்லாயிரக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டனர். பூமியில் புதைக்கப்பட்டுள்ள மின்சார வயர்கள் தீப்பிடித்து எரிந்தது மின் தடைக்கு காரணமாக இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகாரிகளின் விரைவான நடவடிக்கையையடுத்து, நேற்று முன்தினம் நள்ளிரவு மின் சேவை சீரானது. இருப்பினும், நேற்று புறப்படவிருந்த பல விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதனால், ஆத்திரமடைந்த பயணிகள் சமூக வலைத்தளங்களில் விமான நிலைய நிர்வாகம் மீது கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளனர். (இ)

# ரோஹிஞ்யாக்களுக் சட்டத்தின் முன் உட

## ஐ.நா.உயர்ஸ்தானிகர் ஹுஸை

(நைபிடோ)

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரா சட்டத்தின் முன் உடன் நிறுத்தப்பட வேண்டுமெ உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் செயிட் அல்-ஹுஸை

பி.பி.சி. ஊடகசேவைக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கிய நேர் காணலின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ரோஹிஞ்யா முஸ்லிம் களுக்கு எதிரா வன்முறை நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்ப வையாகும். எனவே, எதிர்வரும் ஜன மாதத்தில் புதிய வன்முறை வெடிக்க முன்ன ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரான வ

# ஜனாதிபதித் தேர்தலில் ஆர்லேண்டோ வெற்றி

## தேர்தல் தீர்ப்பாயம் அறிவிப்பு



(டெகுசிகல்பா)

ஹோண்டுராஸ் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் குழப்பம் நிலவிய நிலையில் தற்போதைய ஜனாதிபதி ஆர்லேண்டோ வெற்றி பெற்றதாக அந்நாட்டு தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

வட அமெரிக்க நாடான ஹோண்டுராஸின் ஜனாதிபதியாக ஆர்லேண்டோ ஹெர்னாண்டஸ் உள்ளார். கடந்த மாதம் 26 ஆம் திகதி அந்நாட்டு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே 1.53 சதவிகித வாக்கு வித்தியாசம் நிலவியது.

இதன் காரணமாக தேர்தல் ஆணையம் ஜனாதிபதி வெற்றி பெற்றதாக அறிவிக்கவில்லை. இருப்பினும், ஆர்லேண்டோ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்க்கட்சி வேட்பாளர் சால்வேதார் நஸ்ரெல்லா தேர்தல் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்த நிலையில், தற்போதைய ஜனாதிபதி ஆர்லேண்டோ ஹெர்னாண்டஸ் வெற்றி பெற்றுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சிகள் மக்களைப் போராட வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. (இ)

# மீண்டும் ஜனாதிபதியாக செபஸ்டியன் பினேரா

(சாண்டியாகோ)

சிலியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரரும், முன்னாள் ஜனாதிபதியுமான செபஸ்டியன் பினேரா வெற்றி பெற்றார்.

தென்னமெரிக்க நாடான சிலியில் நேற்று முன்தினம் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. 1.4 கோடி வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். முதன் முறையாக




வெளிநாடு வாழ் சிலியர்களுக்கும் வாக்களிக்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பழைமைவாதியும் முன்னாள் ஜனாதிபதியுமான செபஸ்டியன் பினேரா மற்றும் சோசலிசக் கட்சியைச் சேர்ந்த அலேஜாந்த்ரோ கைலியர் ஆகிய இருவரும் வேட்பாளர்களாக போட்டியிட்ட நிலையில், 54 சதவிகித வாக்குகள் பினேராவுக்கு பதிவாகின. இதனால், நான்கு ஆண்டுகள் கால இடைவேளைக்குப் பின்னர் அவர் ஜனாதிபதியாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மிச்சேல் பாச்லேட்டின் பின்னணியில் அலேஜாந்த்ரோ இருந்த நிலையில், இம்முறை அவர் நேரடியாக களமிறங்கி தோல்வியை சந்தித்துள்ளார். தென்னமெரிக்க கண்டத்திலுள்ள ஆர்ஜென்டீனா, பிரேசில், பொலிவியா, சிலி, கியூபா, ஈக்குவடோர், ஹோண்டுராஸ், உருகுவே மற்றும் பராகுவே ஆகிய நாடுகளில் இடதுசாரிகளே ஆட்சியாளர்களாக இருந்து வந்தனர்.

ஆனால், சில ஆண்டுகளாக ஆர்ஜென்டீனா, பிரேசில், பராகுவே மற்றும் வெனிசுவெலாவில் பழைமைவாதிகள் ஆட்சியைப்பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கிறிஸ்மஸ் கொண்டாட்டம் இரத்து!

ஜெருசலேம் விவகாரத்தில் ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இயேசு கிறிஸ்து வாழ்ந்த இடமாகக் கருதப்படும் நசரேத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாலஸ்தீனத்தில் உள்ள ஜெருசலேம் நகருக்கு இஸ்ரேல்- பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. இரு நாடுகளுமே அந்த நகரை தங்கள்நாட்டின்தலை நகரம்என்று அறிவித்துள்ளன. ஆனால், அதை பெரும்பாலான நாடுகள் ஏற்கவில்லை.

இந்த நிலையில் ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகரம் என்பதை அங்கீகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருப்பதுடன் அரபு நாடுகளில் பதற்றத்தையும் உருவாக்கியுள்ளது.

இந்நிலையில், ட்ரம்பின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கிறிஸ்தவர்களின் மிக முக்கிய புனிதத்தலமான இயேசு கிறிஸ்து வாழ்ந்த இடமாகக் கருதப்படும் நசரேத்தில் இந்த ஆண்டுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து நசரேத் நகர செய்தித் தொடர்பாளர் சலிம் ஷரரா கூறுகையில், 'ட்ரம்ப் ஜெருசலேமைப் பற்றிக் கூறிய கருத்தினால் நாம் இப்போது சர்ச்சையான சூழ்நிலையில் இருக்கிறோம், எனவே பாரம்பரியமாக கிறிஸ்மஸ் தினத்தன்று நடைபெறும் ஆடல் பாடல் நிகழ்ச்சியை இரத்துச் செய்ய முடிவு செய்துள்ளோம்'. ஆண்டு தோறும் நடைபெறும் சந்தைக் கடைகள் மற்றும் கிறிஸ்மஸ் ஆலய வழிபாடு ஆகியன வழக்கம் போல நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை ட்ரம்பின் அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில் பெத்லகேம் மற்றும் ரமல்லா நகரிலுள்ள பேராலயங்களில் அலங்கரிக்கப்பட்டிருந்த விளக்குகள் அணைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கிழக்கு ஜெ புதிய தூதர

## துருக்கி ஜனாதிபதி அ



(இஸ்தான்புல்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அறிவி க்கு பதிலடியாக கிழக்கு ஜெருசலேம் நகரில் பு தூதரகத்தை திறப்போம் என துருக்கி ஜனாதி தாயிப் ஏர்துவான் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் தற்போதுள் ஜெருசலேம் நகரமானது யூதர்கள், கிறிஸ்தவ கள் மற்றும் இஸ்லாமியர்களின் புனித தலம உள்ளது. 'ஆறு நாள் போர்' என்று வரலாற் குறிப்பிடும் 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற மத் கிழக்கு போரின்போது ஜெருசலேம் நகரை பா ஸ்தீனத்திடம் இருந்து இஸ்ரேல் கைப்பற்றி ய

இதனையடுத்து, 1980 ஆம் ஆண்டில் அந்நகரை தன்னுடன் இணைத்து இஸ்ரே நிர்வகித்து வருகிறது. மேலும், அருகாமையி உள்ள வெஸ்ட் பேங்க் பகுதியில் சில பு குடியேற்றங்களை இஸ்ரேல் அமைத்துள்ள எனினும், ஜெருசலேம் நகரம் இஸ்ரேல ஆக்கிரமிக்கப்பட்ட நகராகவே கருதப்ப வருகிறது.

கடந்தாண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர் பிரசாரத்தின் போது, ஜெருசலேமில் அமெரி தூதரகம் அமைக்கப்படும் என ட்ரம்ப் குறிப்பி ருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, ஜெருசலேம் இஸ்ரே

# மும்பையில் தீ விபத்தில் 12 பேர் பரிதாபமாகப் பலி!



மும்பையில் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் அக்கடையின் ஊழியர்கள் 12 பேர் பரிதாபமாக பலியாகினர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், "மும்பையின் கைரானி பகுதியில் பானு ஃபர்சான் கடை உள்ளது. இந்தக் கடையில் நேற்று அதிகாலை 4.25 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அக்கடையின் சுவர்கள் சரிந்தன. இதில் அக்கடையில் பணிபுரிந்த நபர்கள் சிக்கிக் கொண்டனர். தகவல் கிடைத்ததும் அதிகாரிகள் வந்து அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும்சிகிச்சைக்கு முன்பாகவே 12 பேரும் உயிரிழந்ததாக வைத்தியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

# உலகின் மிகச்சிறிய கிறிஸ்மஸ் அட்டை

## பிரிட்டன் விஞ்ஞானிகள் சாதனை

(லண்டன்)

பிரிட்டன் விஞ்ஞானிகள் மிக நுண்ணிய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை வடிவமைத்து சாதனை படைத்துள்ளனர். பிரிட்டனிலுள்ள தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடத்தில் இது தயாரிக்கப்பட்டது. 15 மைக்ரோ மீற்றர் நீளமும் 20 மைக்ரோ மீற்றர் அகலமும் கொண்டது. இந்த வாழ்த்து அட்டையில் சிலிகான் நைட்ரேட் பிளாட்டினம் பூசப்பட்டுள்ளது.



ஒரு த விட இது 2



# வெளிநாடு

## ...க்கு அநீதி இழைத்தவர்கள் ...டன் நிறுத்தப்பட வேண்டும்


### ...ஸைன் வலியுறுத்து

...திராக அநீதி இழைத்தவர்கள் ...டுமென ஐ.நாவின் மனித ...ஹுஸைன் தெரிவித்துள்ளார்.

...த எதிரான ...டத்தப்பட்ட ...ம் ஜனவரி ...க முன்னர், ...ரான வன்

முறை நிறுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பாக மியன் மாரின் தேசிய ஆலோசக ரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகியிடம் தொலை பேசி மூலம் கலந்து ரையா டியுள்ளேன். இருப்பி னும், எந்தவிதப் பயனுமில்லை' எனத் தெரி வித்தார். (இ)



## சோதனைச் சாவடிகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

### 11 பொலிஸார் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட் டின் ஹெல்மெண்ட் மாகாண த்திலுள்ள சோதனைச் சாவ டிகள் மீது தலிபான் தீவிரவா திகள் நேற்று முன்தினம் நடத் திய தாக்குதலில் 11 பொலி ஸார் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் அதிகாலை இம்மா காணத்துக்குட்பட்ட சோதனைச் சாவடிகளின் மீது கும்பலாக வந்த தலிபான் தீவிரவாதி கள் துப் பாக்கிகளால் சுட்டு திடீர் தாக்குதல் நடத்தினர். அங்கு காவலுக்கு நின்ற பொலிஸாரும் இந்தத் தாக்கு தலுக்கு பதிலடி கொடுத்தனர்.

இருதரப்பினருக்கும் இடை யிலான சண்டையில் 11 பொலி ஸார் உயிரிழந்ததாகவும், தீவிர வாதிகளில் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், பலர் தப்பியோடிவிட்டதாக, மாகாண ஆளுநர் ஓமர் சுவாக் தெரிவித்துள்ளார். (இ)

## ...ஜெருசலேம் நகரில் ...தூதரகத்தை திறப்போம்

### ...தி அதிரடி அறிவிப்பு

அறிவிப்பு ...நகரில் புதிய ...ஜனாதிபதி

...போதுள்ள ...கிறிஸ்தவர் ...த தலமாக ...வரலாற்றில் ...ற்ற மத்திய ...களை பால ...ப்பற்றி யது. ...ன்டிலிருந்து ...இஸ்ரேல் ...காமையில் ...சில புதிய ...த்துள்ளது. ...ஸ்ரேலால் ...ருதப்பட்டு

...த் தேர்தல் ...அமெரிக்க ...குறிப்பிட்டி

...இஸ்ரேல்

தலைநகரமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 6 ஆம் திகதி அறிவித் தார்.

அதைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தில் போராட்ட மும், மோதலும் வெடித்தது. 8 பாலஸ்தீனியர்கள் கொல் லப்பட்டனர்.

மேற்கு ஆசிய நாடு களான ஜோர்தான், துருக்கி, பாகிஸ்தான், மலேசியா உள் ளிட்ட முஸ்லிம் நாடுகளிலும் போராட்டம் வெடித்தது. இலட்சக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.

ட்ரம்ப்பின் அறிவிப்பை யடுத்து எதிர் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக இஸ்லா மிய கூட்டுறவு கூட்டமைப் பின் (Organisation of Islamic Cooperation (OIC) அவசர மாநாடு பாலஸ்தீனம் நாட்டின் தலைநகரான இஸ் தான்புல் நகரில் 13.2.2017 அன்று நடைபெற்றது. 1969 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்ட இந்த அமைப்பில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, தென் னமெரிக்கா ஆகிய கண்டங் களைச் சேர்ந்த 57 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்நாடுகளில் வாழும் சுமார் 160 கோடி இஸ்லாமியர்களின் நலன் களை பாதுகாப்பதற்காகவும், சர்வதேச அமைதி மற்றும் ஒருமைப் பாட்டுக்காகவும் இந்த அமைப்பு உருவாக் கப்பட்டது.

இஸ்தான்புல் நகரில் நடை பெற்ற இந்த அமைப்பின் அவசர மாநாட்டில் உரையா ற்றிய பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், பாலஸ் தீனத்தின் தலைநகராக ஜெரு சலேம் இருந்து வந்துள்ளது. இனி எப்போதும் அப்படியே இருக்கும். ஜெருசலேம் பால ஸ்தீனத்தின் தலைநகராக நீடிக்காத வரையில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதியோ, நிரந்தரத்தன் மையோ ஏற்படாது என அறி வித்திருந்தார்.

இந்நிலையில், அமெரி க்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு பதிலடியாக கிழக்கு ஜெருசலேம் நகரில் புதிய தூதரகத்தை திறப் போம் என துருக்கி ஜனாதி பதி தாயிப் ஏர்துவான் தெரிவி த்துள்ளார்.

கடவுளின் அனுமதிப் படியும், விருப்பத்தின்படியும் கிழக்கு ஜெருசலேம் நகரில் எங்கள் நாட்டு தூதரகத்தை திறப்பதற்கான நாள் நெரு ங்கி விட்டது என அவர் குறிப் பிட்டுள்ளார். (இ)




...ரு தயால் ஸ்ராம்பினை ...இது 200 மில்லியன்

சிறியது. இத ற்கு முன் செய் யப்பட்ட சிறிய வாழ்த்து அட் டையை விட 100 மடங்கு சிறியதாகும். அந்த அட்டை யில் பொம்மை ஒன்று வரை யப்பட்டுள்ளது. அதனுள் மக் களுக்கு கிறிஸ் மஸ் வாழ்த்து எழுதப்பட்டு ள்ளது.

இது உலகின் மிகச் சிறிய கிறிஸ் மஸ் வாழ்த்து அட்டை என உருவாக்கி யவர்கள் தெரிவித்துள்ள னர்.

இதனை தேசிய இயற்பி யல் ஆய்வுக்கூட ஆராய்ச்சி யாளர்கள் டாக்டர். டேவிட் கோக்ஸ் மற்றும் டாக்டர் கின் மிங்கர்ட் ஆகிய இருவரும் இணைந்து உருவாக்கி உள் ளனர். (இ)

## கைய்-டக் புயலால்

## கனமழை, நிலச்சரிவில் சிக்கி பிலிப்பைன்ஸில் 26 பேர் பலி!



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள பில்ரி யான் தீவை தாக்கிய கைய்-டக் புயலால் ஏற்பட்ட கன மழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 26 பேர் உயிரிழந்த னர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள பில்ரி யான் தீவை நேற்று முன்தி னம் குறைந்த அழுத்தத் துடன் கூடிய வெப்பமண்டல புயல் தாக்கியது.

கைய்-டக் என பெயரிடப் பட்ட புயலால் உண்டான கனமழை மற்றும் நிலச்சரி வில் சிக்கி இதுவரை 26 பேர் உயிரிழந்ததாக தீவு பகுதியான பில்ரியான் மாகாண ஆளுநர் கெரா ர்டோ எஸ்பினா தெரிவித் துள்ளார். (இ-7)

## அமெரிக்காவின் உளவுத் தகவல் உதவியால் தீவிரவாதத் தாக்குதலை முறியடித்த ரஷ்யா


### ட்ரம்புக்கு புடின் நன்றி

(மொஸ்கோ)

அமெரிக்க உளவு அமை ப்பான சி.ஐ.ஏ. அளித்த இரக சியத் தகவலால் ரஷ்யாவில் நடக்க இருந்த தீவிரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்டு ள்ளதாகவும், அதற்காக ட்ரம் புக்கு புடின் தொலைபேசியில் நன்றி கூறியதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலை யீடு இருந்ததாகவும், ட்ரம்ப் வெற்றிக்கு ரஷ்ய உளவுத் துறை உதவியதாகவும் குற்றச்சாட்டுள்ளது. இதற்காக விசாரணையும் நடந்து வரு கின்றது. இதேபோல், ட்ரம்ப் - புடின் உறவில் சுமுக நிலையே காணப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யா வின் செயின்ட் பீற்றர்ஸ்பெர்க் தேவாலயத்தில் ஐ.எஸ். தீவிர வாதிகள் தாக்குதல் நடத்த லாம் என்று அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. ரஷ்யா வுக்கு தகவலளித்துள்ளது. இதன் அடிப்படையில், தீவிர சோதனை நடத்திய ரஷ்ய பாதுகாப்புப் படையினர் 7 பேரை தீவிரவாதிகள் என கைது செய்துள்ளனர்.



அவர்களிடமிருந்து ஆயு தங்கள் மற்றும் வெடிபொருட் கள், திட்ட வரைபடங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் ரஷ்ய பொலிஸார் தெரிவித்துள்ள னர். இதனையடுத்து, டொனா ல்ட் ட்ரம்புடன் தொலைபேசி யில் தொடர்பு கொண்ட விளா டிமிர் புடின் இதற்காக நன்றி கூறியுள்ளார். இந்தத் தக வலை வெள்ளை மாளிகை மற்றும் ரஷ்ய ஜனாதிபதி அலுவலகமான கிரெம்ளின் உறுதிப்படுத்தியுள்ளது. (இ)

## வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி

# பண மோசடி தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் போலி கடன் அட்டைகளை பயன்படுத்தி பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பணம் மோசடி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மோசடிச் சம்பவம் தொடர்பில் மூவர் குற்ற விசாரணை திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மோசடியாளர்கள் வாடகைக்கு பெற்றுக் கொண்ட வானில் சென்று கடன் அட்டைகளை பயன்படுத்தி பணம் மற்றும் பொருட்களை கொள்ளையடிக்கின்றனர்.

அவர்கள் வங்கி அதிகாரிகள் போல் சென்றே இந்த மோசடியில் ஈடுபடுகின்றனர்.

வங்கிகளுக்கு வெளியே இருக்கும் மோசடியாளர்கள் பணம் பெற்றுக் கொள்ள வரும் வாடிக்கையாளர்களை தவறான வழியில் அனுப்பி அவர்களிடம் உள்ள கடன் அட்டைகளை சோதனையிட வேண்டும் எனக் கூறி பெற்றுக் கொள்கின்றார்கள். குறித்த வங்கி ATM இயந்திரத்தில் சில வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும். ஸ்கிமர் டிவைஸ் என்ற சிறிய இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி கடன் அட்டை களின் தகவல்களை பெற்றுக் கொள்வதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை பயன்படுத்தி போலி கடன் அட்டைகள் தயாரிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி நடவடிக்கையின் மூலம் 7 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாராவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வங்கி கடன் அட்டையை வழங்குமாறு கோரினால் வழங்க வேண்டாம் என பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# வரலாற்றை மாற்றியமைத்த மைத்திரி!





(கொழும்பு)

தியத்தலாவை இராணுவக் கல்லூரியின் 92 ஆவது பிரியாவிடை அணி வகுப்பு நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இராணுவத்தின் பெண் அதிகாரிகளுக்கு இராணுவ பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக இவ்வாறான நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி பங்கேற்ற முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம முற்பகல் இராணுவக் கல்லூரிக்கு சென்ற ஜனாதிபதியை, பிரிகேடியர் பிரியந்த சேனாரத்ன வரவேற்றார்.

இந்நிகழ்வில் 191 கெடட் அதிகாரிகள் வெற்றிகரமாக தமது இராணுவப் பயிற்சியை நிறைவு செய்து இராணுவ சேவையில் இணைந்து கொண்டனர்.

பயிற்சிக் காலத்தில் விசேட திறமைகளை வெளிக்காட்டிய நான்கு அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டதுடன், இரண்டாவ்து லெப்டினன் தரத்திற்கு உயர்த்தும் இலச்சினையும் அணிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன, இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க, தியத்தலாவை இராணுவக் கல்லூரியின் தளபதி பிரிகேடியர் பிரியந்த சேனாரத்ன உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தியதலாவையில் அமைந்துள்ள இலங்கை இராணுவ அறிவியல் பீடத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது. (இ)

# ‘கொழும்பில் நண்டுச் சாப்பாடு’டுவிட்டரில் மலேஷியப் பிரதமர் புகைப்படம் வெளியீடு

(கொழும்பு)

இலங்கைக்கு மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள மலேஷியப் பிரதமர் மொஹமட் நஜீப் துன் ரஸாக், தமது தூதுக்குழுவினருடன் இராப்போசனம் மேற்கொண்டுள்ளார்.


இராப்போசனம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதுடன், இது குறித்து அவர் “கொழும்பில் நண்டு சாப்பாடு” என்று மலாய் மொழியில் டுவிட்டரில் கூறியுள்ளார்.

இது தொடர்பான புகைப்படம் ஒன்றையும் மலேஷியப் பிரதமர் டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில், மலேஷிய பிரதமருடன், அமைச்சர் கயந்த கருணாதிலக்கவும் பங்கேற்றுள்ளார். (இ)



# தேர்தல் முறைப்பாடுகள் 6 ஆக அதிகரிப்பு



(கொழும்பு)

பொலிஸ் தலைமையகத்தின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் வரையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பிலான 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆரச்சிகட்டு, கம்பஹா, அம்பாறை, மொரகஹஹேன மற்றும் வெலிகேபொல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வெலிகேபொல பிரதேசத்தில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பேச்சாளர், ஏனைய முறைப்பாடுகள் பனர் கிழித்தல், போலி ஒப்பம் இட்டு வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் என்பன தொடர்பில் காணப்படுவதாகவும் அறிவித்துள்ளார்.

டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாகவும். கடந்த 16 ஆம் திகதி வரை எந்தவொரு முறைப்பாடும் பதிவாகியிருக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம்பிக்கையூட்டுகிறவர்கள் செய்யும் தவறு

ஒரு சின்ன உள்ளூர் கிரிக்கெட் மேட்ச் நடக்கிறது. பெவிலியனில் அடுத்து தன் மகன் ஆடப் போகிறான். தன் மகனின் அணியோ மோசமான நிலையில் இருக்கின்றது.

அப்பா அட்வைஸ் செய்கிறார். அவர் சொல்வது எனக்கு நன்றாகக் கேட்கிறது. அதுவும் பதற்றமான குரலில் பேசுகிறார். ‘டேய் மானத்தை வாங்குகிற மாதிரி ஆடாதே! டீம் மரியாதையே உன்னோட கையில் தாண்டா இருக்கு. நீ சரியா ஆடலைன்னா இவ்வளவு நாளா நீ பயிற்சி செய்ததுக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். நான் வேற வேலை மெனக்கட்டு வந்திருக்கேன். கவனம்! என்ன? என்கிறார்.

விக்கெட் விழுகிறது. பெவிலியனில் உட்கார்ந்திருந்த பையனின் முறைவருகிறது. பையன் எழுகிறான். அப்பா மறுபடி ஏதோ சொல்கிறார்.

நான் நினைத்தேன். இந்த அப்பா என்ன இப்படி விபரங்கெட்ட மனுஷனா இருக்கார். இவர் சொல்கிற விடயங்களும் தோரணைகளும் அந்தப் பையனைக் கலவரப்படுத்துவது போல் அல்லவா இருக்கின்றன. அந்த அணுகுமுறை எந்த ஒருவரின் தன்னம்பிக்கையையும் குலைக்க அல்லவா செய்யும் என்று எண்ணியபடி அமர்ந்திருக்கிறேன்.

பயல் முதல் பந்தியிலேயே கேட்ச் கொடுத்தும் விக்கெட் கீப்பர் தவற விட்டதால் தப்பித்தான். இரண்டாவது பந்தில் கிளீன் போல்ட்!

அவ்வளவு நேரம் சும்மா இருந்த அந்தப் பையன் பெவிலியனுக்குத் திரும்பியதும் போப்பா! உன்னாலதான் எல்லாம்! போகும் போதே ஒரேயடியாகக் கலவரப்படுத்திட்டே! என்னால கொன்சன்ரேட் பண்ணவே முடியலை என்கிறான். பதிலுக்கு அப்பா கடுகடு என்று பேச விரும்பத்தகாத சூழ்நிலை உருவாகி விட்டது?

பெண் பரீட்சை எழுதப் போகிறாள். அம்மாக்காரியிடம் அவள் எனக்கு ஒரே பயம்மா இருக்கும்மா! என்றாள். அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா. நீ நல்லா எழுதிட்டு வருவே! தைரியமாப் போயிட்டுவா என்கிறார் அம்மா. விபரமான அம்மா.

வீடு திரும்பும் மகள் அம்மா! ரொம்ப நல்லா எழுதியிருக்கேம்மா! என்கிறாள். எனக்குத் தெரியும்மா என்கிறாள் தாய்.

நடந்த காட்சியையே கொஞ்சம் மாற்றிப் போட்டுப் பார்ப்போம். மகள் எனக்குப் பயமா இருக்கும்மா என்று சொன்னதும் தாய் நீ என்னத்தைப் படிச்ச போ! இப்படிப் பயந்து செத்தே எல்லாத்தையும் கோட்டைவிட்டுட்டு வா! எனக்கென்னவோ நீ நல்ல மார்க் எடுப்பே பாஸ் பண்ணுவே இந்தக் குடும்பத்துக்கு கஞ்சி ஊத்துவேன்னு எனக்குத் தோனல போ! என்கிறாள். எப்படி இருக்கும் ரிசல்ட்!


ஊர் பயணம். வாகனம் ஓடுபவரைப் பார்த்து பார்த்து ஓடு மோசமான டிராபிக். ஆக்ஸிடன்ட் ஆயிடப் போகுது! என்று சொல்வதை நிறுத்திவிட்டு கவனமாய்ப்போ என்று சுருக்கமாகச் சொன்னால் போதும். அதையும் காரில் ஏறி உட்காரப் போகும் கடைசி நிமிடத்தில் சொல்லாமல் முன்கூட்டியே சொல்வது நல்லது.

ஒரு மேடைப் பேச்சு, ஒரு சிறு வேலையை முடித்து வரச் சொல்லுதல் என எதற்கும் இவ்விதி பொருந்தும்.

ஒரு தொழிலைத் தொடங்குபவர்களுக்கும் சரி எந்த ஒரு பொறுப்பை ஒப்படைக்கும் போதும் சரி நம்முடைய எதிர்பார்ப்புகளை அதிகம் சொல்வதை விட அவர்களால் முடியும் என்கிற நம்பிக்கையை ஊட்டுவது அவசியம். அப்படிச் செய்யாமல் தன்னம்பிக்கையூட்டுவதாக எண்ணிக் கொண்டு கண்டதையும் சொல்பவர்கள், நடப்பதைக் கெடுக்க எண்ணுபவர்களுக்குச் சமமானவர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகள்



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கும் அதிரடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நேற்று முன்தினம்நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பித்த மாற்றங்களைப் பாதுகாத்து, அடுத்த இரண்டு வருடங்களுக்குள்துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். மகிந்த ஆட்சிக்காலத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தண்டனைவழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் ரணில் தெரிவித்தார். (இ)

# எந்தவொரு கட்சியும் ஐ.தே.கவுக்கு சவாலில்லை

## அமைச்சர் கிரியெல்ல கூறுகிறார்



(கொழும்பு)

"எந்த ஒரு கட்சியும் ஐக்கிய தேசிய கட்சிக்கு சவாலாக இல்லை" என்று உயர் கல்வி மற்றும் பெரு வீதிகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டிமாநகர சபை மற்றும் கங்கவட்டகோளை பிரதேச சபை ஆகியவற்றுக்கு நேற்று முன் தினம் கட்டுப்பணம் செலுத்திய பின் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும்போதே அவர்இதனைத் தெரிவித்தார்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கண்டி மாவட்டத்தை நாங்கள் 81,000 வாக்குகளால் வெற்றியீட்டினோம். பொதுத் தேர்தலில் 135,000 வாக்குகளால் வெற்றி பெற்றோம். ஆகையால் இத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி அமோக வெற்றி ஈட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியை சேர்ந்த பல உறுப்பினர்கள் அக் கட்சியை விட்டு விலகிச் செல்கின்றனர். அதற்குக் காரணம் அதில் இருந்து பயனில்லை என்று அவர்கள் நினைப்பதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடு முழுவதிலும் சிறந்த வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்தியுள்ளது. அவர்கள் மக்களுக்கு விருப்பமான வேட்பாளர்களாவர் என்றும் தெரிவித்தார். (இ)

# கடமைகளை பொறுப்பேற்றார் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சராக கடந்த வாரம் நியமிக்கப்பட்ட ஸ்ரீயானி விஜேவிக்ரம நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

உள்ளூராட்சி மன்ற அமைச்சில் இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற நிகழ்வில், அமைச்சர்களான பைஸர் முஸ்தபா, நிமால் சிறிபால டி சில்வா, விஜித் விஜேமுனி சொய்சா ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

# உற்பத்தி இழப்பீடு காப்புறுதித்திட்டம் நாளை 20 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

உற்பத்தி இழப்பீடு காப்புறுதித் திட்டம் நாளை 20 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த இழப்பீடு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வகையில் ஏக்கர் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

நெல், சோளம் பெரிய வெங்காயம், கிழங்கு மற்றும் மிளகாய் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இந்த உற்பத்திக் காப்புறுதி இழப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அரசாங்கம் இந்த திட்டத்திற்காக வரவு- செலவுத் திட்டம் மூலம் 300 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வரட்சி, வெள்ளம், மண் சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட ஒரு ஏக்கர் உற்பத்தி காணிக்காக இதுவரையில் 10 ஆயிரம் ரூபாய் காப்புறுதி இழப்பீடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

ஹோமாகம - பிடிபன வடக்குப் பகுதியில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபர் வசம் இருந்து மூன்று துப்பாக்கிகள், மகசின் மற்றும் 34 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர் ஹோமாகம - பிடிபன வீதியைச் சேர்ந்தவராவார்.

இவரை ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)


# வைத்தியசாலைக்குள் மரநாய் மனித உடலை கடித்து உண்டது

(கொழும்பு)

வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலம் ஒன்றை மரநாய் கடித்து உண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலம் இவ்வாறு மரநாயினால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மதுரங்குளிய பிரதேசத்தை சேர்ந்த நபரின் சடலமே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளது. சடலத்தின் முகம் உட்பட பல பகுதிகள் மரநாயினால் கடித்து உண்டதாக குறிப்பிடப்படுகின்றது.



இந்தச் சம்பவத்தினால் உயிரிழந்த நபரின் உறவினர்கள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் சிலாபம் வைத்தியசாலையின் வைத்தியர் சிராஜி கூறுகையில்,

சடலத்தை பொறுப்பேற்கும் போது சடலத்தை பரிசோதித்தே பெற்றிருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இது வைத்தியசாலையின் பிரேத அறையில் இடம் பெற்றதா? அல்லது வேறு இடத்தில் இடம் பெற்றுள்ளதா? என்பதில் சந்தேகம் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் இது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்வதாக வைத்தியர் சிராஜ் தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்டியில் கீழிறங்கிய வயல்

(கொழும்பு)

கண்டி - உடுதும்பறை பிரதேசத்தில் வயல் நிலம் ஒன்று நேற்று முன்தினம் முதல் கீழிறங்கி உள்ளதாக அப் பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.




கடந்த சில தினங்களாக இப் பிரதேசத்தில் நிலத்தில் வெடிப்பொன்று காணப்பட்டதாகவும் நேற்று முன்தினம் மேற்படி வயல் பிரதேசத்தில் சுமார் 5 அடி அளவில் நிலம் கீழிறங்கி உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் இந்திக்க ரணவீர தெரிவிக்கையில்,

இது தொடர்பில் விசாரணை ஒன்று மேற்கொள்ளவுள்ளோம். இருந்த போதும் இது ஒரு சாதாரண நிகழ்வாகும் என்றும் தெரிவித்தார். (இ)

# மலேஷிய பிரதமர் ரஸாக் - ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு





(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மலேஷியப் பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஸாக் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவை சந்தித்தார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்த மலேஷியப் பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

மலேஷியப் பிரதமருக்கான உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது 21 மரியாதை வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. (இ)

# தேர்தலுக்கு இரு வேறு அணியாக கட்டுப்பணம் செலுத்தியது ஐ.தே.க.





(பனிக்கன்குளம்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசிய கட்சி இரு வேறு பிரிவுகளாக கட்டுப்பணத்தை செலுத்தினர்

இதனடிப்படையில் துணுக்காய் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை ஒரு பிரிவினர் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கட்டியுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஏனைய மூன்று பிரதேச சபைகளுக்கும் நேற்று முல்லைத்தீவு தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. (2-281)

# பழைமைவாய்ந்த நாகலிங்கச்சிலை மீட்பு!







(கொழும்பு)

களுஹா புபுரஸ்ஸ டெல்டா தோட்ட பச்சைக்காட்டுப் பிரிவில் கற்குகை ஒன்றினுள்ளிருந்து பழைமைவாய்ந்த நாகலிங்கச்சிலை மீட்கப்பட்டுள்ளது. அருள் வாக்கு கூறும் நபரொருவரின் தகவலின் அடிப்படையிலேயே குறித்த சிலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சிலையானது தோட்டத்தில் அமைந்துள்ள ஆறு ஒன்றுக்கு அருகில் இருந்த கற்குகை ஒன்றுக்குள்ளிருந்தே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் மார்கழி பஜனையை முன்னிட்டு வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கரகம் பாலிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது பஜனை குழுவில் பிரதான பங்கு வகிக்கும் வசின்டன் என்ற அருள்வாக்கு கூறும் நபர் பூசையின் உச்சத்தின் போது மேற்குறிப்பிட்ட இடத்தை சுட்டிக்காட்டி அங்கு சிவனுடைய சிலை ஒன்று இருப்பதாகவும் அதனை மீட்டு பூசைகளை மேற்கொள்ளுமாறும் கூறியுள்ளார். இதையடுத்து தீப்பந்தங்களை கொளுத்திக் கொண்டு அவ்விடத்திக்குச் சென்ற இளைஞர்கள் குறித்த நபர் கூறிய இடத்திலிருந்த கற்குகைக்குள் சென்று பார்த்த போது குறித்த சிலை மண் நிறத்தில் காணப்பட்டுள்ளது.

இதன்போது சிலை மீட்கப்பட்டு அதற்கு அபிஷேகம் செய்யப்பட்டு இராமர் கோயிலின் ஒரு புறத்தில் வைத்துள்ளனர்.

சிலை மீட்பு தொடர்பாக கேள்வியுற்ற களுஹா பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவித்துள்ளனர். குறித்த சிலையினை பார்வையிடுவதற்காக கண்டி ,கம்பளை புஸல்லாவை, நுவரெலியா போன்ற பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்த வண்ணமுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# மதுபோதையில் சாரத்தியம் பெண் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய பெண் ஒருவரை தங்கொடுவ பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கடுகெந்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு ஒலி எழுப்பியும் அதனைப் பொருட்படுத்தாது குறித்த பெண் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றுள்ளார்.

இந் நிலையில் இடைமறித்து பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது மது அருந்தியிருந்தமை தெரிய வந்துள்ளது. இதனையடுத்து குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான குறித்த பெண்ணை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# வடிகானுக்குள் இருந்து குடும்பஸ்தர் சடலம் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள வடிகானுக்குள் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி ஷிந்தக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் நேற்றுக் காலை வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் வடிகானில் கிடந்த சடலத்தை மீட்டுள்ளனர்.


இந்த நிலையில், சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்படுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைக்குக் கடத்தவிருந்த பெருமளவிலான கஞ்சா மீட்பு

(இராமநாதபுரம்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த பெருந்தொகையான கஞ்சா போதைப்பொருளுடன் கடத்தலில் ஈடுபட்ட நபரொருவரை இராமநாதபுரம் சுங்கத்துறையினர் கைதுசெய்துள்ள னர்.

இலங்கைக்குக் கடத்தவிருந்த பத்து இலட்சம் ரூபா பெறுமதியிலான 150 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை இராமநாதபுரம் சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.





இராமநாதபுரம் அருகே நொச்சியூரணி கடற்கரை பகுதியில் வைத்து குறித்த கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபரை கைதுசெய்துள்ள இராமநாதபுரம் சுங்கத் துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 3 பேரை தேடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

உற்சவ காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைக் குறைப்பதற்கு தொழிற்றுறை மற்றும் வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம், தற்போது 65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் வெள்ளைப் பச்சையரிசியை 62 ரூபாவுக்கும் 74 ரூபாவாகக் காணப்படும் நாட்டரிசி ஒரு கிலோகிராமை 70 ரூபாய் வரையிலும் குறைத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் பொன்னிச் சம்பாவின் விலை 78 ரூபாவிலிருந்து 71 ரூபாய் வரை குறைக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு கிலோகிராம் சீனியின் விலை 107 ரூபாவிலிருந்து 100 ரூபாய் வரை குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், 152 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 135 ரூபாய்க்கும் 425 கிராம் நிறையுடைய ரின்மீன் 149 ரூபாவிலிருந்து 127 ரூபாய் வரையிலும் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விலை குறைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை, நாடு முழுவதிலுமுள்ள சதொச விற்பனை நிலையங்களிலிருந்து, எவ்வித தட்டுப்பாடுமின்றிப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## விமான சேவைக்கு தரமற்ற எரிபொருள் பயணத்தில் ஆபத்து!

(கொழும்பு)

இலங்கையின் விமான சேவைக்கு தரமற்ற எரிபொருளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட எரிபொருள் சோதனையில் தோல்வியடைந்துள்ளது.

இருப்பினும் இந்த எரிபொருளை இறக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறித்த எரிபொருள்தொகையின் இரண்டாவது சோதனை சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு சோதனை நிலையத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அது தரமற்றதென உறுதி செய்யப்பட்ட போதிலும் எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் உயர்நிர்வாகத்தினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக அந்த சோதனை அறிக்கை மாற்றப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஸ்வர்ண குணவர்தனவின் உறவினரால் இந்த அறிக்கையை மாற்றுவதற்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டாவது சோதனைக்கான எரிபொருள் மாதிரி நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதுவரையிலும், குறித்த எரிபொருள் கப்பல் பாணந்துறையில் இருந்து 20 மைல் தூர கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

எனினும் குறித்த எரிபொருளில் தூசி, குப்பைகள் காணப்பட்டமையினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்ட 7000 மெற்றிக் தொன் எரிபொருள் குறைவடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குப்பை காரணமாக குறித்த தொட்டியில் இருந்த எரிபொருள் கடலில் கொட்டப்பட்டதால் குறைவடைந்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பாவனைக்கு பொருத்தமற்ற எரிபொருளை விமானங்களுக்கு பயன்படுத்துவதால் விமான பயணங்களின் போது ஆபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் குறித்த எரிபொருளை பயன்படுத்த வேண்டாம் என தொழிற்சங்கள் போராட்டங்கள் நடத்தப் போவதாக எச்சரித்துள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## முல்லையில் 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் 72 ஆயிரத்து 961 பேர் வாக்களிக்கத் தகுதி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு , துணுக்காய் கரைதுறைப் பற்று, மாந்தை கிழக்கு ஆகிய நான்கு உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலில் இம்முறை வாக்களிப்பதற்கு 72 ஆயிரத்து 961 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இருந்து 67 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

இத்னடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 12 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 33 ஆயிரத்து 867 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

**கரைதுறைப்பற்று பிரதேச சபை**

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 13 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 26 ஆயிரத்து 773 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

**துணுக்காய் பிரதேச சபை**

இதனடிப்படையில் துணுக்காய் பிரதேச சபைக்கு 8 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 7 ஆயிரத்து 137 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

**மாந்தை கிழக்கு பிரதேச சபை**

இதனடிப்படையில்மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு 8 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய 5 ஆயிரத்து 184 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் மாவட்டம் தழுவிய ரீதியில் 41 வட்டாரங்களில் 67 பேரை தெரிவு செய்ய 72 ஆயிரத்து 961 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் இன்று வரை ஏழு கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

இதற்கமைவாக புதுக்குடியிருப்பு, கரைதுறைப் பற்று,துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஜே.வி.பி, தமிழரசு கட்சி, அகில இலங்கை மக்கள் காங் .கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன கட்டுப்பணம் செலுத்தியுள்ளதோடு கரை துறைப்பற்று பிரதேச சபைக்கு ரி.சிறீதரன் தலைமை யில் ஒரு சுயேட்சைக் குழுவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு கே.ஏ. அற்புதராஜா தலைமையில் ஒரு சுயே ட்சைக் குழுவுமாக இரண்டு சுயேட்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ள ன. (2-281)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1283

facebook

Search for people, places and things

### விதுஷென்

புதிய யுக்திகளை உலகிற்கு அளித்த பெருமை நம்மையே சாரும்...



### அபிராமி

ஆயிரம் பசங்கள லவ் பண்ணி அழிக்கனும்னு நினைக்கிற அவளுங்களே சந்தோசமா சிரிச்சு Status போடும் போது...



ஒரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கனும்னு நினைக்கிற நம்ம பசங்க எதுக்குடா Feel பண்ணி Love Status போடனும்...

### கஜன்

காதலர் தினத்தில் ஒருவன்



நானும் எத்தனை நாளுக்குத்தான் Proud to be a single என்று Status போடுறது

### சந்தோஷ்

தயவு செஞ்சு தியேட்டர்ல படம் பாக்கும் போது சத்தம் போடாம பாருங்க.
நெட்ல பாக்கும்போது சத்தமா இருக்கு ஒன்னுமே புரியல...



### கவிதா

டேய் என்ன எழவு whatsapp updateடா இது.. Contacts ஐ தூக்கிட்டு Status னு ஒன்னு போட்டீங்க



ஏதாவது Status போட்டா Contacts ல உள்ளவன் பூரா வந்து எட்டிப் பாத்துட்டுப் போறான்...

### ராகுலன்




உடலில் சுமந்து உயிரை பகிர்ந்து உருவம் தந்த தெய்வம் அம்மா!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடக்கு மாகாண இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புக்களில் புறக்கணிப்பு!

## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் இளைஞர், யுவதிகள் அரச வேலைவாய்ப்புக்களில் மத்திய அரசைப் போன்றே மாகாண அரசினாலும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இதற்கெதிராக எமது இளைஞர்கள் - யுவதிகள் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த முயற்சிகள் மற்றும் போராட்டங்கள் மத்திய அரசைப் போன்றே மாகாண அரசினாலும் புறந்தள்ளப்பட்டிருந்த நிலையையே காணக்கூடியதாக இருந்தது. வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளது முக்கிய பிரச்சினையாகவுள்ள வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது கருத்து தெரிவித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் நாம் இயன்றளவு நடவடிக்கைகளை எடுத்திருந்தோம்.

தொடர்ந்து நாம் அரசியல் அதிகாரத்தில் பலம் பெற்றிருந்தால் மேற்படி பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான எமது நடவடிக்கைகள் படிப்படியாகத் தொடர்ந்திருக்கும்.

தற்போதைய நிலையில் எமது இளைஞர், யுவதிகளுக்கான அரச வேலைவாய்ப்புகள் மத்திய அரசில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில்தான் நாம் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவால் கொண்டு வரப்பட்டு சில காலம் செயற்படுத்தப்பட்டிருந்த 1990/ 15 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச தொழில் வாய்ப்புகளில் இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அதேநேரம் வடக்கு மாகாண சபையினாலும் எமது இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு பிரச்சினையை போதியளவு தீர்க்க முடியும். பல்வேறு வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும். இருந்தும் அத்தகைய முயற்சிகள் ஏதும் இதுவரையில் நடைபெற்றிராததும் எமது இளைஞர்களது பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாகவுள்ளன.

எமது மக்களின் வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதானது, எமது இன உரிமையை அடகு வைப்பதாகாது. வேலைவாய்ப்பு என்பது எமது மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

எங்கெங்கு எமது மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் உரிமைப் போராட்டங்கள் எழ வேண்டிய நிலையினையே ஆட்சி அதிகாரங்களில் இருக்கின்றவர்கள் உருவாக்கி வருகின்றனர் என டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது மக்கள் சந்திப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் ஹப்புத்தளை நகரில் இடம்பெற்றது. இதனை முன்னாள் ஊவா மாகாணசபை உறுப்பினர் செந்தில் தொண்டமான் ஏற்பாடு செய்திருந்தார்.

## நாவலர் நற்பணி மன்றமும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா

(கொழும்பு)

நாவலர் நற்பணி மன்றமும், கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா 2017 டிசெம்பர் மாதம் 23, 24ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வு காலை 9.30 மணிக்கு நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணை ஆனந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. "நாவலர் : பன்முக நோக்கு" எனும் தலைப்பில் ஆய்வரங்கு நடைபெறவுள்ளது. இதில் மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் மா. மோகனகிருஷ்ணன் "நாவலர் : காலமும் கருத்தும் - ஒரு சமூகவியல் நோக்கு" பற்றியும், யாழ். இணுவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் வே.சேந்தன் "இலங்கைத் தமிழ்த் தேசிய உருவாக்கத்தில் நாவலரின் வகிபங்கு" பற்றியும், யாழ்.பல்கலைக் கழக வருகை தரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் "நாவலரும் தமிழ் இலக்கணமும் : மரபும் மாற்றமும்" பற்றியும், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.ரமணராஜா "நாவலரின் சமய உளவியல்" பற்றியும் உரைநிகழ்த்தவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வு மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச்சங்க தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தொடக்கவுரையையும், நாவலர் நற்பணிமன்றத் தலைவர் ந.கருணை ஆனந்தன் தலைமையுரையையும் நிகழ்த்தவுள்ளனர். பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

"தமிழகத்தில் நாவலர் : பயணம் - ஊடாட்டம் - விளைவுகள்" எனும் தலைப்பில் சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் நிகழ்த்துவார்.

தமிழ்ச் சங்க வெளியீடான "நாவலரின் பன்முக நோக்கு" எனும் நூல் வெளியிடப்படவுள்ளது. கொழும்புத் தமிழ்ச்சங்க கவின்கலைக் குழுச் செயலாளர் தெ. மதுசூதனன் இந்நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். நாவலர் நற்பணிமன்றம் மீள்பிரசுரமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய "யாழ்ப்பாண சமய நிலை" எனும் நூல் வெளியிடப்படவுள்ளது. (இ)


## லலித் வீரதுங்கவிடம் மீண்டும் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் எட்டு வாகனங்களை சந்தை விலையை விட இரண்டு மடங்கு அதிகமான விலைக்கு கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பாக லலித் வீரதுங்கவிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த அரசாங்கத்தில் பதவி வகித்த மேலும் ஒரு வரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.



லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்ட ஆகியோர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அரச பணத்தில் சில் துணிகளை விநியோகித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சுற்றிவளைப்புப் பணிகளில் 2100 சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

உற்சவ காலத்தை முன்னிட்டு 2100 பரிசோதகர்கள் நாடுபூராகவும் சுற்றிவளைப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புக்களானது ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்படும் என இந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்படும் உணவுப் பொருட்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (இ)

## சனிப்பெயர்ச்சி விசேட ஹோமம்

(யாழ்ப்பாணம்)

சனிப்பெயர்ச்சி விசேட ஹோமம் இன்று காலை கச்சேரி நல்லூர் வீதி பாணன் குளம் நாச்சி அம்மன் கோவிலில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கலந்து நவக்கிரக சனி தோசங்கள் நிவர்த்தியாவதற்கான பிரார்த்தனைகளில் ஈடுபடலாம் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-9)



இலங்கை முதலுதவிச் சங்கத்தின் இந்து சமயத் தொண்டர் சபை ஸ்தாபகரும் பிரதம ஆணையாளருமாகிய அமரர் தம்பு நாகேந்திரன் போஜனின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொடிகாமத்திலுள்ள இலங்கை முதலுதவிச் சங்க தலைமைச் செயலகத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது. இலங்கை முதலுதவிச்சங்க ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமரருடைய திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை அணிவித்து நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. (படங்கள்:-பொ.சோபிகா)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2017-13.01.2018



சமயோசிதமாக பேசிக் காரியம் சாதிக்கும் மிதுன இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குருவினுடைய பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. உங்கள் இராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார்.

வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டுவது குருவின் பார்வை தான்.

இருப்பினும் இந்த மாதத் தொடக்கத்தில் சனி பகவானும் பெயர்ச்சியாகப் போகிறார். உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானமான 7 ஆம் இடத்திற்கு அவர் வருகிறார். இதைக் கண்டகச் சனி என்று சொல்வார்கள். கண்டகச் சனியின் ஆதிக்க காலத்தில் உடல்நிலையில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு அகலும். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று இரட்டித்த சிந்தனை மேலோங்கும். துணிவும், தன்னம்பிக்கையும் குறையும். ஆன்மீகப் பெரியவர்கள் மற்றும் சான்றோர்கள், அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் ஆதாயத்தை ஓரளவு வரவழைத்துக் கொள்ளலாம்.

இந்தச் சனிப்பெயர்ச்சி நிகழ்வு டிசெம்பர் 19 ஆம் திகதி நிகழவிருக்கிறது. அதன் பார்வை உங்கள் இராசியிலும், 4,9 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. சனி பார்க்கும் இடத்தைக் குருவும் பார்ப்பதால், உங்கள் இராசி பலப்படுகின்றது. குரு 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கின்றார். எனவே தீய பலன்கள் மாறி நல்ல பலன்கள் உங்களுக்கு கிடைக்க சனிப்பெயர்ச்சி அன்று சனி

புத்ர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கும் அவரே அதிபதி. அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது, பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவார். அவர்களது கல்வியில் ஏற்பட்ட தடை அகலும். வெளிநாடு சென்று படிக்க விரும்பும் உங்களது பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக




இருக்கும் நேரம் இது. தொழில் பங்குதாரர்களை மாற்றும் சூழ்நிலை உருவாகும். தொல்லை கொடுத்த எதிரிகள் விலகுவர். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்

முயற்சியில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியே எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள, மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புதன், சூரியனோடு இணைந்து புத- ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு செல்வாக்கு உயரும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வயதிற்கேற்ற விதத்தில் ஸ்ரீராம ஜெயம் எழுதுவதும் நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கம் தொடங்குகிறது. எனவே விரயங்கள் அதிகரிக்கும். இதுபோன்ற காலத்தில் துணிவும், தன்னம்பிக்கையும், இறைவழிபாடும் தேவை. குரு பார்வை இருப்பதால் கவலைப் படத் தேவை இல்லை.

குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். சுக்ரப் பெயர்ச்சிக்குப் பிறகு

## பண வரவு திருப்திகரமாக இருக்கும்!

எனவே பிள்ளைகளின் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெண் குழந்தைகளின் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். தொழில், உத்தியோகத்தில் மாற்றங்களையும், ஏற்றங்களையும் கொடுக்கும்.

உத்தியோகத்தில் சக பணியாளர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். அலுவலகத்தில் எதிர்பார்த்துக் காத்திருந்த தொகை, கிடைப்பதற்கான வழிபிறக்கும்.

பகவானையும், குரு பகவானையும் வழிபடுங்கள்.

குறிப்பாக சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு அர்ச்சனை செய்வதோடு, எள் தீபமும் ஏற்றுங்கள். சனி கவசத்தை இல்லத்தில் வைத்து படியுங்கள். மந்தனை வழிபட்டால் உங்கள் சிந்தனை வெற்றி பெறும்.

சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன்.

கவனம் செலுத்துவீர்கள்.

பொன்னான புதனின் பெயர்ச்சிக் காலம்!

ஜனவரி 4 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கிறார். புதன் உங்கள் இராசி நாதனாக மட்டுமல்லாமல் 4 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். எனவே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். பத்திரப் பதிவில் இருந்து வந்த தடைகள் அகலும். வெளிநாடு செல்லும்

குடும்பத்திற்குத் தேவை யான விலை உயர்ந்த பொருட்களை வாங்கு வீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பும் உருவாகும். கணவன்-மனைவி க்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். அதன் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், சனி பகவானையும் வழிபட்டு வருவது நல்லது.



பொது வாழ்வில் ஈடுபட்டுப் புகழ் குவிக்கும் கடக இராசி வாசகர்களே!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் குருவும், செவ்வாயும் இணைந்து குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே இல்லத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த சுபகாரியம் இப்பொழுது நடைபெறும். பூமி யோகம் முதல் வாகன யோகம் வரை உண்டாகும் விதத்தில் கிரக நிலைகள் விளங்குகின்றன.

இதுவரை பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரித்த வந்த சனி பகவான், இப்பொழுது ஆறாம் இடத்திற்கு செல்லவிருக்கிறார். இந்த நிகழ்வு டிசெம்பர் 19 ஆம் திகதி நிகழவிருக்கிறது. உங்கள் இராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான், 6 ஆம் இடத்திற்கு வருவதால் விபரீத இராஜயோகம் செயற்படும்.

எனவே திட்டமிடாது நீங்கள் செய்யும்

காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் வாழ்வில் உயர்வைக் கொடுக்கும். பிள்ளைகளும், குடும்ப உறுப்பினர்களும் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்வர். ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். உயர் அதிகாரிகளால் ஏற்பட்ட அல்லல்கள் அகலும்.

ஆறாமிடம் என்பது ஜீவன ஸ்தானமாகக் கருதப்படுவதால், உத்தியோகம் பிடிக்கவில்லையே என்று நினைத்தவர்கள், இப்பொ

பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும். தொழில் முன்னேற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்களும், மாற்றங்களும் வந்து சேரும். நிரந்தப் பணி இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நிரந்தரப் பணி கிடைக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு திறமைக்கேற்ற பொறுப்புகள் வந்து சேரும்.

அமையும். பயணங்களால் பலன் உண்டு. புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்று திட்டமிட்டவர்களுக்கு, அது கைகூடும். ஒரு சிலருக்கு கடல்தாண்டிச் செல்லும் முயற்சி நிறைவேறும். புதன் சூரியனுடன் இணைவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி அனுகூலம் தரும்.

இம்மாதம் ராகு-கேதுக்களுக்கு பிரீதியாக நாகசாந்தி செய்து கொள்வது நல்லது. பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.


## நிரந்தரப் பணி கிடைக்கும்!

முது விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்க முயற்சிப்பார்கள். அதற்குரிய மூலதனமும் கேட்ட இடத்தில் கிடைக்கும். நண்பர்களில் நம்பிக்கைக்குரிய ஒருசிலர் உங்களோடு கூட்டுச்சேர முன்வருவர்.

இராசியில் இராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருப்பதால், சர்ப்ப தோஷத்தின் பிடியில் இருக்கிறீர்கள். எனவே நாகசாந்திப் பரிகாரங்களை செய்து கொள்ளுங்கள். மேலும் சனிக்கிழமை தோறும் சனிபகவான் சந்நிதியில் எள் தீபம் ஏற்றுங்கள். நல்லது நடக்கும். விநாயகரும், அனுமனும் இணைந்த ஆதியந்தப் பிரபு வழிபாட்டை, யோகபலம் பெற்ற நாளில் செய்து வந்தால் கனவுகள் நனவாகும்.

தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த




அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஜனவரி 4 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்பது ஜோதிட வாக்கு. எனவே பணப்புழக்கம் நன்றாக இருக்கும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் எதிர்பார்த்தபடி

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாராட்டும், புகழும் கூடும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் அன்பிற்குப் பாத்திரமாவீர்கள். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் பெருகும். தொழில், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நிரந்தரப் பணி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். பிள்ளைகளின் விருப்பப்படி வெளிநாடு சென்று படிப்பதற்கான வழியை ஏற்படுத்துவீர்கள். பெண் பிள்ளைகள், பெற்றோரின் பாசமழையில் நனைவார்கள். உத்தியோகத்தில் இருக்கும் பெண்களுக்கு வருமானம் திருப்தி தரும். ஒரு சிலருக்கு இடம், பூமி வாங்கும் யோகம் ஏற்படும். துர்க்கை வழிபாடும், சனிபகவான் வழிபாடும் துயரங்களைப் போக்கும்.

(தொடரும்)




# ஐயோ பாம்பு!



முன்னொரு காலத்தில் ஓர் விவசாயி இருந்தான். அவன் மனைவி பிரசவத்தின் போது ஒரு பிள்ளையைப் பெற்று விட்டு இறந்து விட்டாள். தன் குழந்தையை நல்லபடியாக வளர்க்க விவசாயி வேறு ஒரு பெண்ணை மணம் செய்து கொண்டான்.

அவளும், விவசாயியின் குழந்தையைத் தன் குழந்தையைப் போல கண்ணும் கருத்துமாகப் பார்த்து அன்போடு வளர்த்து வந்தாள். மாற்றாந்தாய் என்ற எண்ணமே இல்லாமல் சொந்தத் தாயாகவே அவள் அந்தக் குழந்தையை வளர்ப்பதைப் பார்த்து ஊரே வியந்தது.

சில வருடங்களில் அவள் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். மூன்று குழந்தைகளும் மிக்க பாசத்தோடு வளர்ந்தனர். அவளது பிள்ளைகள் இருவருக்கும் தனது அண்ணன், அப்பாவின் மூத்த தாரத்திற்குப் பிறந்தவன் என்ற விடயமே தெரியாது. அவர்கள் அண்ணனைத் தங்களுக்கு முன் பிறந்தவனாகவே எண்ணி இருந்தனர்.

மூவரும் வளர்ந்து பெரியவர்களாகினர். விவசாயி தனது மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்தான். பிள்ளைகள் அனைவரும் ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். வயதாகிய காரணத்தினால் விவசாயி இறந்து போனார். சில வருடங்கள் சென்றன.

மூத்த பிள்ளை வயலுக்குச் செல்வான், ஆட்களை அடக்கி நன்றாக வேலை வாங்குவான். தங்கள் நிலம், வீடு ஆகியவற்றை கண் போல பார்த்துக் கொள்வான். அதனால் அவர்களுக்கு விளைச்சல் பெருகியது. மேலும் மேலும் செல்வம் பெருகியது. இதைக் கண்ட அவர்களது பக்கத்து வீட்டுக்காரன் பொறாமை கொண்டான்.

எப்படியாவது இந்தக் குடும்பத்தைப் பிரித்து விட வேண்டும். அண்ணன், தம்பி ஒற்றுமையாக இருப்பதால்தான் இவ்வளவு செல்வம் பெருகுகிறது என நினைத்தான். கடைசிச் சகோதரனைத் தனியாக அழைத்து, நீயும் உன் அண்ணனும் எப்படியெல்லாம் பாடுபடுகிறீர்கள். இவ்வளவு சொத்துச் சேர்த்து வைத்திருக்கிறீர்கள். ஆனால், இதை எல்லாம் அந்த அநாதைப் பயலுக்கும் அல்லவா பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டி இருக்கிறது என்று பற்ற வைத்தான்.

அவன் என் அண்ணன். அவனை ஏன் அநாதை என்கிறீர்கள்? என்றான் கடைசிச் சகோதரன். பக்கத்து வீட்டுக்காரன் விடயத்தைத் தெளிவாகச் சொல்லி, பிரிவினையைத் தூண்டி விட்டான். இதனால் கடைசிச் சகோதரனின் மனம் சற்றே மாறி விட்டது. அம்மாவிடம் வந்து இந்தச் செய்தி உண்மையா? என்று கேட்டான்.

ஆமாம் என்று ஒப்புக் கொண்டாள். அவன் எனக்குப் பிறக்கவில்லை, மூத்தவளுக்குப் பிறந்தவன்தான் என்றாள். அவளுக்கு மூத்த பிள்ளையின் மீது பாசம் இருந்தது. எனவே, மூன்று சகோதரர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்பினாள்.

இரவு நேரம், அவள் திடீரென்று "பாம்பு பாம்பு" என்று கத்தினாள். உடனே பிள்ளைகள் அலறி அடித்துக் கொண்டு வந்து, எங்கே அம்மா பாம்பு? என்று கேட்டனர். மருமகள் ஒருத்தி கை விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தாள்.

சின்னதாகப் பாம்பு ஒன்று வந்தது. அது நான் பார்த்துக் கொண்டே இருக்கும் போது, மூத்தவன் வாயைத் திறந்து கொண்டு தூங்கினான். அவனது வயிற்றுக்குள் நுழைந்து விட்டது" என்றாள் அவள். இதைக் கேட்டதும் மூத்தவனுக்குத் திக்கென்று இருந்தது. வயிற்றுக்குள் சென்ற பாம்பை எப்படி வரவழைப்பது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அம்மா பொய் சொல்லமாட்டாள். அவள் சொல்கிறாள் வயிற்றுக்குள் பாம்பு நுழைந்துவிட்டது என்று, என்ன செய்வது? புரியாமல் தவித்தான் அவன். மறுநாள் காலை அவன் உடல் காய்ச்சல் கண்டு கொதித்தது. பயம் தொற்றிக் கொண்டது. உடல் சோர்வாக இருந்தது. அவன் வயலுக்குச் செல்லாமல் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

இப்படியாக ஒரு வாரம் சென்றது. மூத்தவன் பயத்தினால் பாதியாக இளைத்துவிட்டான். அவனால் முன்போல சாப்பிட முடியவில்லை. அதனால் வயல் வேல்லைகளைப் பார்க்கவோ, மற்ற வேலைகளைச் செய்யவோ முடியவில்லை. வயிற்றுக்குள் நுழைந்த பாம்பு, அவனைப் படாதபாடுபடுத்தி எடுப்பதாக அவள் தினமும் நூறு முறையாவது புலம்பினாள். ஒரு மாதம் ஓடிவிட்டது. மூத்தவன் இப்போது படுத்த படுக்கையாகக் கிடந்தான்.

இது தான் சமயம் என்று அவர்களது பக்கத்து வீட்டுக்காரன், தனது வரப்பைத் தள்ளிக்கட்டி அவர்களது நிலத்தில் பாதியைத் தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டான். "இது என்ன அநியாயம்?" என்று நியாயம் கேட்ட இளையவனை கத்தியைக் காட்டி மிரட்டினான்.

"அண்ணன் இருந்தவரை அடங்கிக் கிடந்த இவன், இப்போது எப்படித் துள்ளுகிறான் பார்த்தாயா?" என்றான் மற்றொருவன்.

(தொடரும்)

## 19.12.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1154- இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.
- 1606- ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ் டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.
- 1871- யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் (ordination) வழங்கப்பட்டன.
- 1877- யாழ்ப்பாணம், நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.
- 1907- பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 239 பேர் கொல்லப்பட்டனர்.
- 1916- முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.
- 1941- அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.
- 1961- போர்த்துகீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1963- சன்சிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.
- 1967- இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும்போது காணாமல் போன அவுஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 1972- சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பலோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.
- 1983-உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக்கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.
- 1984- ஹொங்கொங்கின் ஆட்சியை ஜூலை 1, 1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீனத் தலைவர் டெங் க்ஸியாவோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்கரெட் தாட்சர் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.
- 1986- சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
- 1997-இந்தோனேசியாவில் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 104 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997- டைட்டானிக் திரைப்படம் வெளியானது.
- 2000- யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1933- அ. விநாயகமூர்த்தி, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி
- 1934- பிரதிபா பட்டேல், 12 ஆவது இந்தியக் குடியரசுத் தலைவர்
- 1936- சண்முகம் சிவலிங்கம், ஈழத்துக் கவிஞர் (இ. 2012)
- 1974- ரிக்கி பொண்டிங், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1994- கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழ் உணர்வாளர், தமிழறிஞர் (பி. 1899)
- 2013- டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர் (பி. 1945)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (கோவா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 350 | 400 | 300 |
| தக்காளி | 100 | 180 | 140 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 40 | 50 |
| கோவா | 100 | 160 | 140 | 140 | 140 |
| கரட் | 150 | 200 | 180 | 200 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 150 | 100 | 100 | 140 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 180 | 500 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 140 | 160 | 280 |
| பாகற்காய் | 300 | 400 | 180 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 180 | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 120 | 60 | 100 | 50 |
| பயற்றங்காய் | 100 | 150 | 120 | 160 | 150 |
| லீக்ஸ் | 250 | 250 | 280 | 300 | 200 |
| பீற்றூட் | 200 | 250 | 160 | 200 | 120 |
| கறிமிளகாய் | 300 | 500 | 320 | 400 | 300 |
| முருங்கைக்காய் | — | — | 400 | 400 | — |
| போஞ்சி | 200 | 250 | 220 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 120 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 100 | 50 | 40 |
| தேசிக்காய் | 80 | 30 | 60 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 100 | 75 | 100 |
| இராசவள்ளி | 300 | 400 | — | 300 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 300 | — | 280 | — |
| முள்ளங்கி | — | 120 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 100 | 80 |

பணத்துக்காகவும் வெற்றிக்காகவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை.

– நாராயணமூர்த்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் உரிமைக் குரலாக தமிழ் மக்கள் பேரவை ஒலிக்கட்டும்

தமிழ் மக்கள் பேரவைக்கு இன்று அகவை இரண்டு. 19.12.2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தனது இரண்டு ஆண்டு காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் எழுச்சியை பதிவு செய்துள்ளது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை வடக்கிலும் கிழக்கிலும் நடத்தியது மட்டுமன்றி கிழக்கு மாகாணத்தில் மாபெரும் முத்தமிழ் விழாவை வெற்றிகரமாக நடத்தியது.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கிழக்கில் நடந்த முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தங்கள் தலைவர் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்று பிரகடனம் செய்யும் அளவில் மிகப்பெரும் ஒற்றுமையை ஏற்படுத்தியது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைத்ததுடன் அதற்குத் தமிழ் மக்களின் ஆதரவையும் ஆணையையும் பெற்றுக் கொண்டது.

இன்று வெளிநாடுகளில் இருந்து யார் இங்கு வந்தாலும் எங்களுக்கான அரசியல் தீர்வு இதுதான் என்று புத்தகமாக கையளிக்கக்கூடிய ஒரு பெரும் பதிலைச் செய்த பெருமை தமிழ் மக்கள் பேரவையையே சாரும்.

இதுமட்டுமன்றி, தமிழ் மக்களின் நிலைமையை தமிழ் மக்களின் அரசியல் யதார்த்த சூழ்நிலையை வெளிப்படையாகக் கூறிய வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் தலைவராக பரிணமிப்பதை விரும்பாதவர்கள் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை இரவோடு இரவாக கொண்டு வந்தபோது,

ஒரு கணப்பொழுதில் திரண்டெழுந்த தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்வை நிறுத்தி எழுச்சி கொண்டெழுந்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது மகா மடமைத்தனம் என்று சம்பந்தப்பட்டவர்கள் கதிகலங்கியது மட்டுமன்றி இத்தகையவர்கள் மக்கள் மத்தியில் தலைகாட்ட முடியாதவர்களாக ஓடிஒளித்து கொண்டனர்.

இதற்கெல்லாம் காரணம் தமிழ் மக்களின் மாபெரும் சக்தியான தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் என்றால் அதில் மிகைப்படுத்தல் எதுவுமில்லை.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே நிறைவடைந்திருந்தாலும் அதன் செயலாக்கம் பல ஆண்டுகள் இயங்குகின்ற ஒரு பெரும் மக்கள் இயக்கம் போன்ற மன உணர்வை ஏற்படுத்தியிருப்பது அந்த அமைப்பின் மிகப்பெரும் வெற்றி எனலாம்.

இன்று இரண்டு ஆண்டுகளை நிறைவுபடுத்தும் தமிழ் மக்கள் பேரவையின் அடுத்த இலக்கு தமிழ் இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்கள் மூலம் நேர்மையான அரசியலை உருவாக்குவதும் அவர்கள் மூலமாக முதலீடுகள், உற்பத்தி முயற்சிகள், மக்கள் சமூகத்தை நெறிப்படுத்தி வழிப்படுத்திச் செல்வதற்கான விழிப்பு நிலை நடவடிக்கைகள், எங்கு என்ன நடந்தாலும் அதனை அறிவதற்கான தகவல் மையங்களை இயக்குவித்தல் என ஏகப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்புக்கள் தமிழ் மக்கள் பேரவைக்கு உண்டு.

இதனைச் செய்வதற்காக இளைஞர் மாநாட்டை பெருமெடுப்பில் மேடை கூட்டுவது சாலப்பொருத்தம் என்ற கருத்தை பேரவைக்கான வாழ்த்தாக தெரியப்படுத்துலாம்.

## நாணயத்தாள்கள் சேதப்படுத்தப்படுவதைத் தடுக்க இலங்கை மத்திய வங்கி மக்களுக்கு விசேட அறிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி தூய நாணயத்தாள் கொள்கை மற்றும் இலங்கை நாணயத்தாள்களை வேண்டுமென்று சேதப்படுத்தல், மாற்றம் செய்தல் மற்றும் உருச் சிதைத்தல் மீதான ஒழுங்குவிதிகளை நடைமுறைக்கிடுவதற்காக பொதுமக்களின் அவதானத்தை ஈர்த்துள்ளது.

நாணயத்தாள்களின் தர நிர்ணயத்தினைப் பேணுவதனையும் இதனூடாக உணமையான மற்றும் போலி நாணயத்தாள்களுக்கிடையிலான வேறுபடுத்தலுக்கு உதவுவதனையும் இலக்காகக் கொண்டு தூய நாணயத்தாள் கொள்கை இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கொள்கையினூடாக நாட்டின் நடத்தைப்பாங்கினை அதிகரிப்பதற்கும் நாணயத்தாள்கள் செயன்முறைப்படுத்தல் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் இலங்கை நாணயத்தாள்களை வேண்டுமென்றே சேதப்படுத்தல், மாற்றம் செய்தல் மற்றும் உருச்சிதைத்தல் போன்றவை குற்றமாகக் கருதப்படுவதுடன் சிறை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டு தண்டனைகளும் விதிக்கக் கூடியதொன்றாகும். நாணய விதிச் சட்டத்தின் "உ" ஒழுங்குவிதியின் கீழ், வேண்டுமென்றே உருச்சிதைக்கப்பட்ட அல்லது மாற்றம் செய்யப்பட்ட நாணயத்தாள்கள் தொடர்பில் கோரல்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படலாகாது என்பதுடன், அத்தகைய நாணயத்தாள்கள் இலங்கை மத்திய வங்கியினால் பிடித்து வைத்திருக்கப்படலாம். இந்நாணயத்தாள்களை வைத்திருப்பவர் அத்தகைய நாணயத்தாள்களின் முகப்பெறுமதியினை இழக்க வேண்டியிருக்கும்.

மேலும், வேண்டுமென்று சேதப்படுத்தல், மாற்றம் செய்யப்படும் அல்லது உருச்சிதைத்தல் நாணயத்தாள்களை மாற்றீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் நாணயத்தாள் அச்சிடுதலினை அதிகரிக்க வேண்டியுள்ளது. இது, வேறுவகையில் மிகவும் ஆக்கபூர்வமான நோக்கங்களுக்கு செலவிடக்கூடிய பொது நிதியின் பாரியதொகையொன்றினை இதற்காக செலவிட வேண்டியுள்ளது. இதனால், வேண்டுமென்றே சேதப்படுத்தப்படும், மாற்றியமைக்கப்படும் அல்லது உருச் சிதைக்கப்படும் நாணயத்தாள்கள் தொடர்பில் கோரல்களை ஏற்றுக் கொள்வதில் இலங்கை மத்திய வங்கிக்கு எவ்விதக் கடப்பாடும் கிடையாது.

இதன்படி, இலங்கை நாணயத்தாள்களை வேண்டுமென்றே சேதப்படுத்தும், மாற்றம் செய்கின்ற அல்லது உருக்குலைக்கின்ற நடவடிக்கைகளிலிருந்து தவிர்த்து கொள்ளுமாறும், அத்துடன் அத்தகைய நாணயத்தாள்கள் அவர்களிடம் உள்ளதாயின் 2017.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் அருகிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் அவற்றை கையளிக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கி கோரிக்கை விடுக்கின்றது. எவ்வாறாயினும், வேண்டுமென்று சேதப்படுத்தப்படாத, மாற்றம் செய்யப்படாத அல்லது உருச் சிதைக்கப்படாத ஆனால் வழமையான சுற்றோட்டத்தின்போது தேய்தல் மற்றும் கிழிதல் காரணமாக சேதமாக்கப்படுகின்ற நாணயத்தாள்கள் நடைமுறையிலுள்ளது போன்று இலங்கை மத்திய வங்கியிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலும் தொடர்ந்தும் பரிமாற்றம் செய்யக் கூடியது என்பதனை பொது மக்களுக்கு இலங்கை மத்திய வங்கி அறிவிக்க விரும்புகின்றது.

தூய நாணயத்தாள் கொள்கையினைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாட்டின் சட்ட ரீதியான ஏற்பின் விழுமியத்தினையும் ஒருமைப்பாட்டினையும் காப்பதற்காக உதவுவதற்கு பொதுமக்களுக்கு இலங்கை மத்திய வங்கி அழைப்பு விடுக்கின்றது என இலங்கை மத்திய வங்கி கணகாணிப்பாளர் விடுத் துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பணத்தை பறிகொடுத்த மக்களால் நிதி நிறுவனம் நேற்று முற்றுகை

### நிறுவன ஊழியர்களும் மக்களால் தடுத்து வைப்பு

வவுனியாவில் செயற்பட்டு வரும் நிதி நிறுவனம் ஒன்று மக்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றி வந்ததால் நேற்று அந் நிறுவனத்தை மக்கள் முற்றுகையிட்டனர்.

வவுனியாவில் இலங்கை பண்ணை மற்றும் மீன்பிடி உற்பத்தி ஊக்குவிப்பாளர் தனியார் கம்பனி என்ற நிதி நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தை மக்களிடம் பெற்று பத்து இலட்சம் ரூபாய் கடனாக தருவதாக கூறி அம்மக்களை ஏமாற்றியுள்ளது.

குறித்த நிதி நிறுவனத்தின் உரிமையாளரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதை அறிந்த மக்கள் பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராட்சி கண்டி வீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்திற்கு சென்று அங்கு அந்நிறுவன ஊழியர்களை சிறை பிடித்து வைத்திருந்த மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பணத்தை பறிகொடுத்த அனைவரும் வந்து முறைப்பாடு பதிவு செயயுமாறு கோரிக்கை விடுத்தார்.

நிதி நிறுவனத்தை முற்றுகையிட்டிருந்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி எட்டு மணிநேரத்திற்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊழியர்களை விடுவித்ததுடன் அனைவரையும்பொலிஸ நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

குறித்த நிதி நிறுவனமானது ஏற்கெனவே மத்திய வங்கியின் பெயரை பயன்படுத்தி மக்களிடம் நிதி மோசடியில் ஈடுபட்டிருந்த நிலையில் மத்திய வங்கியினால் குறித்த நிறுவனம் எச்சரிக்கப்பட்ட நிலையில் பத்திரிகையில் குறித்த நிதி நிறுவனம் பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ் மோசடி சம்பந்தமாக கருத்து தெரிவித்த மக்கள் குறிப்பிட்ட நிதி நிறுவனத்திற்கு கடன்பட்டும் நகைகளை அடைவு வைத்தும் பணத்தை செலுத்தியுள்ளதாகவும் பணத்தை மீண்டும் பெறாமல் வீட்டிற்கு செல்ல முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன் சுமார் 350 பேர் வரையில் பணம் செலுத்தி ஏமாந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-250)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சோறு ஊட்டுதல் என்றால் என்ன?**

முதன்முதலாகக் குழந்தைக்கு அன்னம் வழங்குவதைத்தான் சோறு ஊட்டுதல் என்கிறார்கள்.

இது ஐந்து அல்லது ஆறாவது மாதத்தில் நடக்கும்.

வீட்டில் அல்லது கோவிலில் வைத்து குழந்தைக்குச் சோறு ஊட்டுவார்கள். இந்நிகழ்வை ஆடம்பரமாகவோ அல்லது சாதாரணமாகவோ செய்வதுண்டு.

*(தொடரும்)*

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- இடையறாத முயற்சியின் மூலம் நம்மை நாடி வரும் கஷ்டங்களை வெல்ல முடியும்.
- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உள்ளவனாக நினைத்தால் வலிமை படைத்தவனாகிறாய்.
- வாழ்க்கையில் கீழ்ப்படிவதற்கு கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.
- அடக்கப்படாத மனம் நம்மைக் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும். அடக்கப்பட்ட மனம் நமக்குப் பாதுகாப்பளிப்பதுடன், விடுதலையும் தரும்.
- அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை ஆகியவை நமக்குத் தேவை.
- இயற்கையை எதிர்த்துப் போராடி வளர வேண்டும். இயற்கையோடு எப்போதும் போர் செய்வதே மனித முன்னேற்றத்தின் படிக்கற்களாகும்.
- இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது, ஆனால், ஈசனது படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்தல் மிக நன்றாகும்.
- மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள். இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.



# ஆஷஸ் டெஸ்ட் தொடர் இங்கிலாந்து படுதோல்வி

## தொடர் அவுஸ்திரேலியா வசம்





அவுஸ்திரேலியா- இங்கிலாந்து இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட் ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேன். அடிலெய்டில் நடைபெற்ற முதல் இரண்டு டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், 3 ஆவது போட்டி பெர்த் மைதானம் கடந்த 14 ஆம் திகதி தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 403 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 662 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. ஸ்மித் இரட்டை சதம் அடித்தார்.

முதல் இன்னிங்சில் 259 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து 2ஆவது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் அலஸ்டைர் குக் 14 ஓட்டங்களிலும் ஸ்டோன்மேன் 3 ஓட்டங்களிலும். ஜோரூட் 14 ஓட்டங்களிலும் ஆட்டமிழக்க 4ஆவது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தாவித் மலன் 28 ஓட்டங்களுடனும், பேர்ஸ் டோவ் 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

க்ளீன் போல்டாகிய பேர்ஸ்டோவ்

ஐந்தாவது நாள் ஆட்டம் தொடங்கியது. மழை காரணமாக காலையில் ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மதிய உணவு இடைவேளை வரை ஆட்டம் தொடங்கவில்லை. மதிய உணவு இடைவேளைக்குப் பின் ஆட்டம் தொடங்கியது.

ஆட்டம் தொடங்கியதும் பேர்ஸ்டோவ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மொயீன் அலி 11 ஓட்டங்களிலும் கிறிஸ் வோக்ஸ் 22 ஓட்டங்களிலும் ஓவர்டன் 12 ஓட்டங்களிலும் பிராட் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் தாவித் மலன் 54 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்க இங்கிலாந்து 2ஆவது இன்னிங்சில் 218 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் அவஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 என அவுஸ்திரேலியா கைப்பற்றி தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான 4 ஆவது டெஸ்ட் மெல்பேர்னில் 26 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. (க)

# இரட்டைச் சதத்தின் உதவியால் தரவரிசையில் முன்னேற்றம்



இந்தியா - இலங்கை இடையிலான இந்தியா 2-1 என வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. மொகாலியில் நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் போட்டியில் ரோகித் சர்மா இரட்டை சதம் அடித்தார். அவர் 208 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த இரட்டை சதத்தால் ஐ.சி.சி. துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் ரோகித் சர்மா 7 ஆவது இடத்தில் இருந்து 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். விராட் ஹோலி முதல் இடத்திலும், ஏ.பி. டிவில்லியர்ஸ் 2ஆவது இடத்திலும், டேவிட் வார்னர் 3ஆவது இடத்திலும். பாபர் ஆசம் 4ஆவது இடத்திலும். ரோகித் சர்மா 5ஆவது இடத்திலும் உள்ளனர். ஜோ ரூட் 1 இடங்கள் பின்தங்கி 7ஆவது இடத்திற்கு பின்தங்கியுள்ளார். (க)

# பிரிட்டனில் அசத்தும் இலங்கை மாணவன்

## சர்வதேச ஊடகங்கள் பெருமிதம்



இலங்கையைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் சர்வதேச ஊடகங்களில் அதிகம் பேசப்படும் நபராக மாறியுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த மாணவனான கிறிஸ் கோபிகிருஷ்ணா பிரித்தானியாவின் பிரபல கால்பந்தாட்டக் கழகம் ஒன்றில் விளையாடி வருகிறார்.

Leicester city fc மற்றும் Cristal palace அணிகளுக்கு இடையில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் கிறிஸ் தனது சிறப்பான ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார் என சர்வதேச தொலைக்காட்சிகள் பாராட்டியுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த கோல்கீப்பர் ஒருவர் பிரித்தானிய கால்பந்தாட்ட அணியில் விளையாடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

Jaguar கார் நிறுவனத்தின் ஊடாக பிரித்தானியாவில் விளையாடும் வாய்ப்பினை கிறிஸ் பெற்றுள்ளதாக அவரின் தந்தை கோபிகிருஷ்ணா சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மாணவர் ஒருவர் முதல் முறையாக சர்வதேசம் வரை சென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

கிறிஸ் கோபிகிருஷ்ணா பிரித்தானியாவின் Coventry என்ற பகுதியில் 2009 ஆம் ஆண்டு பிறந்துள்ளார்.

கிறிஸ் கோபிகிருஷ்ணாவின் பெற்றோர் மட்டக்களப்பு கல்லாறு பகுதியில் இருந்து 2006 ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# 4000 ஓட்டம் கடந்து ஷிகர் தவான் சாதனை



இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் 62 ஓட்டங்கள் எடுத்த போது ஒரு நாள் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்கள் (95 ஆவது இன்னிங்ஸ்) கடந்தார்.

இந்த மைல்கல்லை அதி வேகமாக எட்டிய 6 ஆவது வீரர் தவான் ஆவார். இந்திய அளவில் விராட் ஹோலிக்கு (93 இன்னிங்ஸ்) பிறகு இந்த இலக்கை வேகமாக அடைந்திருக்கிறார்.

2017ஆம் ஆண்டில் இந்திய அணியின் ஒரு நாள் போட்டி பயணம் நேற்றோடு நிறைவடைந்தது. இந்திய அணி இந்த ஆண்டில் 29 ஆட்டங்களில் பங்கேற்று 21இல் வெற்றியும், 7ஆல் தோல்வியும் கண்டுள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவில்லை. இந்த ஆண்டில் அதிக வெற்றிகளை ருசித்த அணி இந்தியா தான். அதே சமயம் இலங்கை அணி 29 ஆட்டங்களில் விளையாடி 5 ஆல் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறது.

விசாகப்பட்டினத்தில் 7 ஆவது ஆட்டத்தில் ஆடிய இந்தியா அதில் பதிவு செய்த 6ஆவது வெற்றி இதுவாகும்.

இந்திய அணி தொடர்ச்சியாக கைப்பற்றிய 8ஆவது ஒரு நாள் தொடர் இதுவாகும். இரு நாடுகள் இடையிலான ஒரு நாள் தொடரை தொடர்ச்சியாக அதிக தடவை வென்ற அணி மேற்கிந்திய தீவுகள் (14) ஆகும். அடுத்த இடத்தில் அவுஸ்திரேனியாவும், இந்தியாவும் (தலா 8) உள்ளன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நடப்பாண்டில் ஆயிரம் ஓட்டங்கள் உபுல்தரங்க படைத்த சாதனை

2017இல் 1000 ஓட்டங்களை கடந்த மூன்றாவது சர்வதேச கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை உபுல் தரங்க படைத்துள்ளார்.

இலங்கை - இந்தியா இடையில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கை வீரர் உபுல் தரங்க அபாரமாக விளையாடி 95 ஓட்டங்கள் குவித்தார்.

இதன்மூலம் தரங்க புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

2017 இல் 1000 ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இந்தாண்டில் 25 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள தரங்க மொத்தம் 1011 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி 26 போட்டிகளில் 1460 ஓட்டங்களுடன் முதலிடத்திலும், ரோகித் சர்மா 21 போட்டிகளில் 1286 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். (க)

# கட்சிகளுக்கு இடையேயான ஆசனப் பங்கீடுகள் முடிவின்றி கூட்டமைப்பின் கூட்டம் நிறைவு

(யாழ்ப்பாணம்)

*வேட்பு மனுக்களைத் தயாரிப்பதற்கான ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் இறுதி செய்யப்படாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையேயான நேற்றைய கூட்டம் நிறைவடைந்தது.*

வடக்கு-கிழக்கில் மீதமுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களைத் தயாரிக்கும் பணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. வேட்பு மனுக்களைக் கையளிக்கும் இறுதி நாள் வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தமிழ் அரசுக் கட்சி, புளொட் மற்றும் ரெலோ ஆகியவற்றின் உயர்மட்டத்தினர் நேற்றிரவு 7 மணி முதல் சுமார் 2 மணிநேரம் ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் கிளிநொச்சியில் மூன்று பிரதேச சபைகளுக்குமான ஆசனப் பங்கீட்டில் புளொட் கட்சிக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அந்தக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கூட்டத்திலிருந்து இடைநடுவே வெளியேறினார்.

இந்த நிலையில் எந்த ஆசனப் பங்கீடுகளும் இறுதி முடிவு செய்யப்படாமலேயே நேற்றைய கூட்டம் நிறைவடைந்தது. இன்றும் பேச்சுக்கள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## தொற்று நோய் தொடர்...

த்தில் சாதாரண காய்ச்சல் ஒன்றின் மூலம் ஒரு வகைக்கிருமி தாக்கியதன் காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இது கடந்த ஒன்றரை மாதங்களுக்குள் ஏற்பட்டுள்ளது. இதில் 50 தொடக்கம் 70 வயதுடையவர்கள் உயிரிழந்துள்ளனர். முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் உள்ள சிலரே கூடியளவில் இத் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

சாதாரண காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 100க்கும் மேற்பட்டவர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்திருந்தனர். அதில் இன்புளுவன்சா ஏ, பி வைரஸ் தாக்கத்துக்கு உள்ளானவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம், யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டனர். ஏனையவர்கள சுகமடைந்து திரும்பியுள்ளனர். அநுராதபுரத்துக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டவர்கள் மீண்டும் திரும்பியிருந்தனர்.

கிருமி தாக்கத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் இரத்தமாதிரிகள் வழமை போல் பரிசோதனைக்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் சிலருடைய இரத்தமாதிரிகள்பெறுபேறு கிடைத்துள்ளன. இன்புளுவன்சா ஏ,பி வகை கிருமி தொற்று என கண்டறியப்பட்டது. இது சாதாரண காய்ச்சலில் இருந்து ஏற்படும் கிருமித்தாக்கம் ஆகும்.

மேலும் வழமைபோல் இவ்வாறான கிருமி தொற்று தொடர்பாக ஆராய வரும் மருத்துவ குழு, பொதுமக்கள் கூடிய கவனத்துடனும் விழிப்புணர்வுடனும் இருந்தால் உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என தெரிவித்து சென்றுள்ளார்கள்.

உயிரிழப்பு ஏற்பட்ட முல்லைத்தீவு வைத்தியசாலையில் கூடிய கவனத்துடன் நோயாளர்கள் பராமரிக்கப்படுகின்றனர். இருப்பினும் வயது முதிர்ந்தவர்கள் நோயெதிர்ப்பு சக்தி குறைந்துள்ள காரணத்தினால் அவர்கள் கூடுதலான தாக்கத்துக்குள்ளாகிறார்கள்.

பொதுமக்கள் சாதாரண காய்ச்சல் என்று அதை கவனத்தில் எடுக்காது அசண்டையீனமாக இருப்பதனால் தான் பாரிய விளைவுகள் ஏற்படுகிறது. காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

பொதுமக்கள் மர்மக்காய்ச்சல், தொற்று காய்ச்சல் என பீதியடையாமல் தம்மை தாமே பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளை சரியாக கவனித்தால் உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## இலங்கை ஜனாதிபதி...

நாள்கள் அரசுமுறைப் பயணமாக நேற்று முன்தினம் வந்த மலேசியப் பிரதமர் மொகமட் நஜீப் பின்-துன் அப்துல் ரசாக்குக்கு ஜனாதிபதி செயலகத்தில் நேறறு அரசுமுறையிலான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் அளிக்கப்பட்ட இந்த வரவேற்பை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மலேசியப் பிரதமர் அப்துல் ரசாக் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்களும், மலேசிய அமைச்சர்களும் பங்கேற்றனர்.

இதன் போது, ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மலேசியா அளித்து வருகின்ற ஆதரவுக்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான மேற்குலகின் கருத்துக்களுடன் மலேசியா இணங்குவதில்லை. ஏனைய நாடுகளின் மீது மேற்குலகம் தனது செல்வாக்கைச் செலுத்த முனைகின்றது என்று மலேசியப் பிரதமர் குற்றஞ் சாட்டினார்.

மலேசியப் பிரதமரின் இந்தக் கருத்துடன், தாமும் இணங்குவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இருதரப்பு வர்த்தகம் கடந்த சில ஆண்டுகளில் உறுதியாக வளர்ந்திருக்கிறது என்றும் ஆண்டின் முதல் 10 மாதங்களிலும், 680 மில்லியன் டொலரை அது எட்டியிருப்பதாகவும் மலேசியப் பிரதமர் குறிப்பிட்டார்.

எனினும், வர்த்தகச் சமநிலை மலேசியாவுக்குச் சாதகமாகவே இருப்பதாகவும், மலேசியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

வர்த்தகத்தை மேலும் விரிவாக்குவதற்கு, முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்பாடு பயனுள்ளதாக இருக்கும் என்றும், இது தொடர்பான பேச்சுக்களை தமது அமைச்சர்கள் விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் மலேசியப் பிரதமர் கூறினார்.

இலங்கையில் 47 திட்டங்களில் மலேசியா 3.1 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சுக்களில், வர்த்தகம், முதலீடு, விவசாயம், போதைப் பொருள் மற்றும் மனித கடத்தல் குறித்த புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கும் இருநாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும், நனோ மற்றும் உயிரியல் தொழில்நுட்பம், இணைய வர்த்தகம், இணைய நீதிமன்றம், சர்வதேச அரங்குகள் மற்றும் இராணுவப் பயிற்சிகளை விரிவுபடுத்துவதற்கும் இரு நாடுகளின் தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின் போது இரண்டு புரிந்துணர்வு உடன்பாடுகளும் கைெயழுத்திடப்பட்டன. (ம)

## உள்ளூராட்சி தேர்தல்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனை அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான வர்த்தமானி எதிர்வரும் 26ஆம் திகதி வெளியாகும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுக்களைப் பொறுப்பேற்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

248 உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப்பணமும் வேட்புமனுவும் பொறுப்பேற்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை நாளை புதன்கிழமை நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளது.

அத்துடன் வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் பணி நாளைமறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளது.

248 உள்ளூராட்சி சபைகளுக்கு கீழ் 17 மாநகர சபைகளுக்கும், 23 நகர சபைகளுக்கும், 208 பிரதேச சபைகளுக்குமாக இரண்டாம் கட்ட தேர்தல் பணிகள் இடம்பெறுகின்றன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதலாம் கட்டப் பணியின் கீழ் கட்டுப்பணம் செலுத்துதல், வேட்பு மனுக்களை பொறுப்பேற்கும் பணி கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்தது.

21 மாவட்டங்களில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்காக வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

7 மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகளுக்காக முதல் கட்டப் பணிகள் இதன் கீழ் இடம்பெற்றன.

30 அரசியல் கட்சிகளும் 49 சுயேட்சைக் குழுக்களும் முதல் கட்டமாக வேட்புமனுக்களை கையளித்தன.

வேட்புமனுக்களை ஏற்கும்பணிகள் இரண்டு கட்டமாக இடம்பெறுகின்ற போதும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒரே தினத்திலேயே இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (ம)

# பொலிஸ் அதிகாரிகள் 11 பேருக்கு இடமாற்றம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் 11 பேருக்கு இடமாற்றம் வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற, உள்ளூராட்சிமன்ற தேர்தல் அறிவிப்பு தொடர்பான ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் ஆகியன வழங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும், தேர்தல் அறிவிப்பிற்கு முன்பாகவே பொலிஸ் ஆணைக்குழுவிடம் இருந்து இடமாற்றத்திற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும், அதனால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ம)

# புதுவகை போதைப்பொருள் இலங்கையில் மீட்பு

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத போதைப் பொருள் என கூறப்படும், ஜெல் வகையான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

நிகவரெட்டிய பகுதியில் வைத்து பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் இதனைக் கைப்பற்றியுள்ளதோடு, சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விஷேட பரிசோதனைகளுக்காக நகரில் இருந்த போது, கைகளால் எழுதப்பட்ட இலக்கத் தகடினை உடைய வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளது.

அதில் ஜெல் வகை போதைப் பொருள் மற்றும் அதனை பயன்படுத்தத் தேவையான உபகரணமும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதான ஒருவர் என்பதோடு, குறித்த வாகனம் வாடகைக்கு பெறப்பட்ட ஒன்று எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆர்னோல்டின் பதவி விலகலுக்கான காரணத்தை வெளியிட்டார் சுமந்திரன்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வேட்பாளராக இம்மானுவேல் ஆர்னோல்ட்டை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரேரித்துள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளின் தலைமை பதவிகள் யார் யாருக்கு வழங்கப்படும் என்பதை தற்போது அறிவிப்பதில்லை என்று தீர்மானித்து இருந்த போதும் இந்த விடயத்தில் அவர் மாகாண சபை உறுப்பினராக இருந்த காரணத்தினால் அதிலிருந்து அவர் தகுந்த நேரத்துக்கு ராஜினாமா செய்யவேண்டிய தேவை இருந்த காரணத்தினாலேயே அவரை மேயர் பதவிக்கு பிரேரித்து மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருக்கின்றார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாநகர மேயர் வேட்பாளராகதான் இம்மானுவேல் ஆர்னோல்ட் போட்டியிடுவார் என அவர் மேலும்தெரிவித்தார். (ம)

## மிகப்பெரும் மக்கள்...

பெருமை தமிழ் மக்கள் பேரவைக்கு உண்டு என்றும் இளைஞர்களே! நான் கூற வருவது உங்கள் எழுச்சியில் எவ்வாறு முதலமைச்சரை இதுவரை நிலைத்து நிற்க வைத்தீர்களோ! அதே எழுச்சியை மக்கள் இயக்கமாக பரிணமித்து அரசுக்குக் காட்ட வேண்டிய தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே தருணம் பார்த்திருங்கள் என வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் பேரவையை சுட்டிக்காட்டி ஆற்றிய உரை. தமிழ் மக்கள் பேரவை மிகப் பெரும் மக்கள் இயக்கமாக பரிணமிக்க இருப்பதற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது என்று அரசியல் அவதானிகள் தமிழ் மக்கள் பேரவையின் ஈராண்டு நிறைவில் தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். (ம)

## சட்டபூர்வ கேபிள்...

இணைப்புக்களை வழங்கிவருபவர்கள் வரும் 31ஆம் திகதிக்குள் தமது சேவையை நிறுத்தவேண்டும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே சட்டபூர்வமாக இயங்கும் தமது நிறுவனத்தின் கேபிள்கள் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளது என குறித்த நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ம)

## மலேசிய பிரதமர்...

சி.வி.விக்னேஸ்வரனையும் சந்திப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்று மலேசிய வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ம)

## வட மாகாண சபை...

மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

குறித்த கடிதம் முறைப்படி தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென குறிப்பிட்ட அவைத்தலைவர் சிவஞானம், நேற்று இது தொடர்பான அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

அதற்கான பணிப்புரை, பேரவைச் செயலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ம)

## தேர்தல் முறைப்...

பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

IT Spot
185, V.M.றோட்,
பருத்தித்துறை.
(1647)
ICT
ஆரம்பம்:03/01/2018
ஆங்கில, தமிழ்
மொழிமூல வகுப்புக்கள்
தரம்-10, 11 & A/L 2018/19/20/ Day
க.செந்தூரன் (B.Sc (Hons) BIT) 0770871456

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-696)

UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வீடு வாடகைக்கு உண்டு
இராசாவின் தோட்டம் புகையிரதக் கடவைக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் சகல வசதிகளுடனும் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தனியார், அரச நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(594) 077 922 7887

# மரண அறிவித்தல்



### திருமதி
## இராசரத்தினம் இரத்தினேஸ்வரி

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் இரத்தினேஸ்வரி அவர்கள் நேற்று ***(18.12.2017)*** திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இரவீந்திரன், காலஞ்சென்ற மோகனராசா மற்றும் கருணாநிதி (ஜேர்மனி), சாந்தினி, பத்மாதேவி (ஜேர்மனி), ஜெயராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசிலா, கருணாவதி, சத்தியா, பாலகிருஸ்ணன் (ஓய்வூதியர்- விவசாய ஆராய்ச்சி நிலையம்), விஜயகுமார், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியும், சரண்யா (சுவிஸ்), தஜீபன், நிஷானி (கனடா), பிறஜீத்தா, துஷியந்தன், சுகிர்தன், றஜீத்தா (கனடா), றஜிதன், றக்சியா (ஜேர்மனி), சுபாஜினி (உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி, கிளிநொச்சி), பிரதாப் (லண்டன்), கிசோனா (யாழ்.பல்கலைக்கழகம், முகாமைத்துவபீடம்), லக்சியா, விஜிதன் (ஜேர்மனி), அஸ்வினி, சேது (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யதுமினா, கிஷான், குபேசன், சுபீட்சனா, சங்கீர்த், சந்தோஷ், திவ்வியன், குபீசன், மகிசனா, ஹரிகரன், ஆதவன், அக்ஷிகா, அபிரா, அனோஜன், அக்ஷயன், வர்சா, ஸ்ரீகவிநயா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2017) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டைஆலடி பொது இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.** (1873)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

கடந்த 30.12.2016 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

### திருமதி
## திருஞானசம்பந்தர் லீலாவதி

அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (19.12.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இல்லாத இவ்வுலகம்
என்றும் இருள்மயமானது!
இனி எங்கே காண்போம் உங்கள்
மலர்ந்த முகத்தை?
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்!!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



தோற்றம்: 07.02.1939 - மறைவு: 30.12.2016

நவாலி, அரசடி,
மானிப்பாய். (1684)

இங்ஙனம் : குடும்பத்தினர்
(சம்பந்தர் மாமா)

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.